பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோர்ப்பரேஷன்
14, டாம் வீதி கொழும்பு

Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily
மலர் 8 (20 11 66) இதழ் 280

பராபவ ஷஃபான் 6 கார்த்திகை 5 ஞாயிற்றுக்கிழமை

முல்லா பீடிகள்
MULLA BEEDIES JAFFNA
MULLA BEEDIES
முல்லா பீடிகள்
TRADE MARK
REGD. NO. 24566
MULLA
MULLA BEEDI CO. JAFFNA

# தீண்டாமை ஒழிப்புக்கு சர்வகட்சி குழு தெரிவு

## தொகுதிவாரியாக பிரசாரம் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தீண்டாமைக் கொடுமையை ஒழிப்பதற்கான வழிவகைகளை ஆராய்ந்து செயல்படுத்துவதற்காக, சர்வகட்சி அங்கத்தவர்களையும் கொண்ட ஒரு மத்தியகுழு, நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சர்வகட்சி மகாநாட்டில் தெரிவுசெய்யப்பட்டது. இக் குழு தொகுதிவாரியாக உபகுழுக்களை தெரிவுசெய்து அந்தந்த தொகுதிகளில் தீண்டாமைஒழிப்பை உபகுழுக்கள் மூலம் நடத்தும்.

தொகுதிவாரியாக தெரிவு செய்யப்படும் உபகுழுக்களில், பாராளுமன்ற உறுப்பினர்களும், போட்டியிட்ட அபேட்சகர்களும் இருக்க வேண்டுமென்றும், அப்படியானல்தான் தேர்தல்காலங்களில், தீண்டாமைப் பிரச்னையை அரசியல் பிரச்னையாக்க முடியாமலிருக்குமென்றும், கட்சி வேறுபாடின்றி எல்லாரும் ஒத்துழைப்பார்களென்றும் தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் பேராசிரியர் திரு. கு. நேசையா தலைமையில் நடைபெற்ற சர்வகட்சி மகாநாட்டில் தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் எம்.பிக்களும், இலங்கைகம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜகட்சி, புரட்சிவாத சமசமாஜகட்சி பிரமுகர்களும், மற்றும் திருவள்ளுவர் மகாசபை, மக்கள் முன்னேற்ற மன்றப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள்.

கூட்ட ஆரம்பத்தில் தற்காலிகதலைவராக திரு. ஜி. எம். பொன்னுத்துரை கூட்டத்தை நடாத்தினர். யாழ்ப்பாணம் மாநகரசபை பொழுதுபோக்கு மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது.

தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், இக் குழு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு பூரண ஆதரவும், ஒத்துழைப்பும் வழங்க ஆயத்தமாக இருப்பதாகத் தெரிவித்தார்.

தீண்டாமை ஒழிப்பு மத்திய குழு அங்கத்தவர்கள்:

(8-ம் பக்கம் பார்க்க)

## 'சட்டத்தை திருத்த வழக்கறிஞர் குழு'

யாழ்ப்பாணம், ஞாயிறு

"தற்பொழுதுள்ள சமுதாய ஏற்றத்தாழ்வுச்சட்டம் போதிய பாதுகாப்பு அளிக்கவில்லை, இச்சட்டத்தை நான் நன்ருக ஆராய்ந்துள்ளேன். இந்தச் சட்டத்தை திருத்த ஒரு உபகுழுவை தெரிவு செய்ய வேண்டும். அந்த உப குழுவில் வழக்கறிஞர்களும் இடம்பெறவேண்டும் இதை வலுப்பெற்ற கூட்டமாக முயற்சிக்க வேண்டும்"

நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சர்வகட்சி மகாநாட்டில் உடுப்பிட்டி எம்.பி. திரு. எம். சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது

இந்தக்குழுவில் நாம் பணியாற்ற தயாராகஇருக்கிறேன். இந்தக்குழுதொகுதிவாரியாக உப குழுக்களை தெரிவுசெய்து தீண்டாமை ஒழிப்பிற்கு முன்நிற்கவேண்டும். இதில் அபிப்பிராய பேதமில்லை. சாதிப்பாகுபாட்டை ஒழிக்கும் பொறுப்பு பெரும்பான்மை மக்களிடமே ஒப்படைக்கப்படவேண்டும். இதற்குச் சட்டம் கட்டாயம்வேண்டும். ஆனல்சட்டத்தினல் மட்டும் இதைச் செய்துவிட முடியாது.

தீண்டாமை ஒழிப்பில்

(8-ம் பக்கம் பார்க்க)

## 'கல்முனையின் தரம் ஏன் உயர்த்தப்படவில்லை?'

### மந்திரி திருச்செல்வம் விளக்கம்

சாய்ந்தமருது, சனி

"கடந்தபல வருடங்களாகத் தண்ணீரில்லாதுகஷ்டப்பட்டு வாழ்ந்தஉங்களுக்குப் பட்டிருப்புத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. இராசமாணிக்கம் மேற்கொண்ட முயற்சிகளினல் இந்தக்குளாய் நீர்த்திட்டத்துக்கான கல்நாட்டு விழாவில் நான்பங்குகொள்ளவேண்டி ஏற்பட்டது" என்று நற்பிட்டிமுனையில் உள்ளூராட்சி மந்திரி திரு. எம். திருச்செல்வம் பேசுகையில் கூறினர்.

கல்முனையில் பெரும்பாலும் முஸ்லிம்கள் வாழ்கின்றனர்கள். இப் பட்டினத்தை உயர்தரமாக்கினல் அங்கு வாழும்மக்கள் வரிச்சுமையைத் தாங்கமாட்டார்கள்.

கல்முனைப் பட்டினசபை உயர்தரமாக்கும் திட்டத்தைக் கைவிடுமாறு திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் என்னைக்கேட்டுக் கொண்ட காரணத்தால் அத்திட்டத்தைக் கைவிட்டு விட்டேன் என்றும் மந்திரி திருச்செல்வம்கூறினர்.

கிராமசபைத் தலைவர் திரு. வி. தம்பையா தலைமையில்நடைபெற்ற இக் கல்நாட்டுவிழாவில் பட்டிருப்புத்தொகுதி எம். பி. திரு. இராசமாணிக்கம் கரைவாகு நிந்தவூர்ப்பற்றுக் காரியாதிகாரி, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் ஜனப் மைசூர் மௌலானா, திரு. குணரத்தினம் உட்பட பலர் பேசினர்.

கிளிநொச்சியில்

## மத்தியவகுப்பினருக்கு குடியேற்றத் திட்டம்

### விவசாய குழுக்கூட்ட தீர்மானம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கால்நடைப்பண்ணை அபிவிருத்திபற்றிய மகாநாடு ஒன்றை விரைவில் கூட்டுவதெனநடைபெற்ற மாவட்ட விவசாயக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இம் மகாநாட்டுக்கு கால்நடைப் பகுதி உதவி அதிபர் திரு. அமரசிங்காவையும், பண்ணை அதிகாரிகளையும் அழைப்பதென முடிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் நடைபெற்ற மாவட்ட விவசாயக்குழுக் கூட்டத்தில், அபிவிருத்தி சம்பந்தப்பட்ட விஷயங்கள்பற்றி ஆலோசிக்கப்பட்டன.

மிருசுவிலில் கன்னிப் பெண்களுக்கான குடியேற்றத்திட்டமொன்று 45 ஏக்கர் காணியில் ஆரம்பிப்பதென்றும், இதற்கான காணிக்கச்சேரி ஜனவரியில் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கிளிநொச்சியில் ஒதுக்கப்பட்டகாட்டுப்பிரதேசத்தில் 1500 ஏக்கரை எடுத்து ஒருவருக்கு அரைஏக்கர் விதம் மத்திய வகுப்பினருக்கு பங்கீடுசெய்வதென்றும், இத்திட்டத்தில் 2000 பேருக்கு காணி வழங்குவதென்றும் இத்திட்டத்தை அடுத்த மாதம்முதல் ஆரம்பிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. கிளிநொச்சியிலுள்ள பெரும் குளத்தின்பெயரை கனகாம்பிகை குளமெனப் பெயர் மாற்றுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது பசளைக் களஞ்சியமொன்றை திறுவுமதற்கு கிளிநொச்சியில் காணிஒக்கப்பட்டது போல் தனுக்காய் மாங்குளத்திலும் காணி ஒதுக்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## "அதிக கப்பல்கள் இங்கு வரவேண்டும்"

### துறைமுக சேவைச்சமாஜ கருத்தரங்கில் அரசாங்க அதிபர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"யாழ்ப்பாணம், காங்கேசன்துறை துறைமுகத்தில் சென்ற வருடம் 12 கப்பல்களிலிருந்து பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன இவ்வருடம் எட்டுக்கப்பல்கள்வந்தன இத்துறைமுகத்துக்கு அதிகமான கப்பல்களை வரவழைத்தால் தொழிலாளர் பலருக்கு வேலை கொடுக்கமுடியும், அத்துடன் மேலும்பல சங்கங்களை இச்சமாஜத்தில் சேர்க்கலாம்."

யாழ். மாவட்ட கூட்டுறவு துறைமுகச் சேவைச் சமாசத்தின் கருத்தரங்கை, யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா நேற்றுக்காலை

(8-பக்கம் பார்க்க)

## கிளே இந்தோனேஷியா செல்வார்

ஜாகர்த்தா, நவ. 20

உலக அதிபாரகுத்துச் சண்டை வீரர் முகமது அலி (காஷியஸ் கிளே) இந்தோனேஷியாவுக்கு இந்த மாத இறுதியில் செல்லவிருக்கிருர்.

## இந்தியாவில் செக் தலைவர்

புதுடில்லி, நவ. 19

செக்கோஸ்லேவிய அதிபர் நொவொட்னி இன்று இந்தியா வந்துசேர்ந்தபோது அவருக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது. இந்திய ஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் அவரை வரவேற்று உபசரித்தார்.

செக்கோஸ்லேவிய உயர் தலைவர் ஒருவர் இந்தியாவுக்கு விஜயம் செய்வது இதுவே முதற்தடவை.

டெஸ்ட் கிரிக்கெட்

## பாகிஸ்தான் 7:517

டாக்கா, நவ. 18

இலங்கை கோஷ்டிக்கும் பாகிஸ்தான் கோஷ்டிக்கும் இடையிலான 2-வது கிரிக்கெட் டெஸ்டின் இரண்டாவது நாளான இன்று இலங்கை 4 விக்கெட்டுகளை இழந்து 90 ரன்கள் எடுத்திருந்தது.

பாகிஸ்தான் முதல் இன்னிங்சில் 7 விக்கெட் நஷ்டத்திற்கு 517 ரன்கள் எடுத்து ஆட்டத்தை முடித்துக் கொண்டது காலநிலை சரியில்லாததால் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## சேவை

தையல் மெஷின்

தையல் மெஷின் — பெற்றோமாக்ஸ் உங்கள் திருப்திக்கு திருத்திக்கொடுக்கப்படும். உதிரிப் பாகங்களும் பெற்றுக்கொள்ளலாம். அருணா ஏஜென்சிஸ், அளவெட்டி. 1461

## தேவை

நெசவாளர்:

நெசவு வேலையில் அனுபவம் பெற்றஆட்கள் தேவை. உடன் நேரில் விண்ணப்பிக்கவும்:— 'சித்ரா கைத்தறி நிலையம், 244, நாவலர் வீதி, ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம். 1499

## விற்பனைக்கு

கோழிக்குஞ்சுகள்;

உயர்ந்த இனக் குஞ்சுகள், நிதானமானவிலைகள். இலாபம் என்றால் 100% இலாபம். பத்துக் கோழிகளால் பெறும் வருமானத்தை ஒரு கோழி உங்களுக்குக்கொடுக்கும். மேலும் மேலும் உங்களையும் உங்கள் அயலவரையும் ஊக்குவிக்கும். எம்மிடம் மருந்துகளும் பெற்றுக்கொள்ளலாம். அருணா ஏஜென்சிஸ், அளவெட்டி. 1492

## ஏறினால்போச்சு!

முருங்கன், சனி

மன்னாரிலிருந்து முருங்கனுக்குச் செல்லும் பஸ்களில் மழை காலத்தில் குடைபிடிக்க வேண்டியதாகவிருக்கின்றது. இப்பாதையில் சேவையில் ஈடுபட்டிருக்கும் சில பஸ்களில் முறையான ஆசனங்கள் இல்லை. பஸ்வண்டியை நிறுத்துவதற்கு மணி அடிக்கும் கயிற்றை இழுத்தால் மணி அடிபடுவதில்லையாம்.

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்தியவர்களில் அடங்கிய சந்திரலோகம் இதனால். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் கர்பூர ஞானந்தர் J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


**மகாத்மா தியேட்டர்**
(தெல்லிப்பழை)
தினசரி 6-30, 9-30
போயா தினங்களில் காலை 10 மணி
சிவாஜி—சாவித்திரி
நடித்த
**திருவிளையாடல்**
பிரதமரின் யாழ்ப்பாண விஜயமும் காண்பிக்கப்படும்

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
கல்யாணகுமார் - தேவிகா
நடித்த
**கடவுளைக் கண்டேன்**


**யாதவா**
(மூளாய்)
தனசா 6-30, 9-30
விடுமுறை நாட்களில் 2-30 மணி
சிவாஜி - சாவித்திரி
நடித்த
**காத்தவராயன்**

**REGAL—JAFFNA**
**NOW SHOWING**
Gregory Peck
in
**TO KILL A MOCKING BIRD**

**நியூ காலிங்கஸ்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எஸ்.எஸ்.ஆர். -விஜயகுமாரி
நடித்த
**நானும் ஒரு பெண்**

**2வது வெற்றி வாரம்!**

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | நவா (கொம்பனித்தெரு) |
| வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜயா (மட்டக்களப்பு) | ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) |
| மொடேர்ண் (பண்டாரவளை) | மொடேர்ண் (பதுளை) | விஜிதா (ஹட்டன்) |



**சிவாஜி கணேசன், தேவிகா**
சந்திரபாபு, புஷ்பலதா, அசோகன், பாலாஜி,
நாகையா, ஏ. வி. எம். ராஜன்
ஜாவர் சீதாராமன், பி. எஸ். வீரப்பா
நடிக்கும்
**ஆண்டவன் கட்டளை**
இசை: விஸ்வநாதன் இராமமூர்த்தி
டைரக்ஷன்: சங்கர்


## தாக்குதல் வழக்கில் தீர்ப்பு

மாவிட்டபுரம். சனி

அளவெட்டி மாசியப்பிட்டியைச்சேர்ந்த கார்த்திகேசு அப்புத்துரை என்பவர் சென்ற ஆகஸ்ட் மாதம் 15-ம் திகதி அதே இடத்தைச்சேர்ந்த இளைய தம்பிமனோரஞ்சிதம் என்பவரை கத்தியால்வெட்டிக்காயம் ஏற்படுத்தியதாக சுன்னாகப் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டவழக்கு மல்லாகம் நீதிபதி திரு. டி. எம். நித்சிங்கா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. நீதிபதி விசாரணையின்பின் எதிரியைக் குற்றவாளியாகக்கண்டு ஐம்பது ரூபாய் அபராதம் விதித்தார். சுன்னாகப்பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் திரு. மெண்டிஸ் வழக்கைநடத்தினார்.

மின்சாரப் பகுதியினர்

## ஊழியர் வேலை நீக்கம் ஆராயப்பட்டது

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண மாநகரசபை மின்சாரப்பகுதியைச் சேர்ந்த பன்னிரண்டு ஊழியர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து விசேஷ ஆணையாளர்கள் திருவாளர்கள் நடேசன், மாணிக்கவாசகர் ஆகியோர் தலைமையில் ஒரு மகாநாடு நடைபெற்றது.

மின்சாரத் தொழிலாளர் சார்பாக தேசிய ஊழியர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை மாவட்ட பிரதிநிதி திரு. சி. குணரத்தினமும் இரு கூட்டு செயலாளர்களும் சமூகம்கொடுத்திருந்தனர்.

இம் மகாநாட்டில் மின்சார ஊழியர்களின் பல பிரச்சினைகள் ஆராயப்பட்டு சுமுகமான முடிவிற்கு வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## களைபிடுங்கும் விழா

உடுப்பிட்டி, சனி

நெல்லியடி மத்தியமகா வித்தியாலயம், கட்டைவேலி ஞானசாரியார் கல்லூரி, வதிரி திரு. இருதயக் கல்லூரி ஆகியவற்றின் மாணவர்கள் கரவெட்டிப் பகுதியில் உள்ள வயல்களில் களை பிடுங்குவதில் ஈடுபட்டுள்ளனர்.




## கொழும்பு

ஞாயிறு 20 - 11 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 திருப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

844 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 சங்கீத இசை.

844 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்தநாள் வாழ்த்துக்கள், 5-30 படத்திலிருந்து.

இரவு 6-10 விவசாயச் செய்திகள், 6-15 நாடோடிப்பாடல்கள், 7-15 தேவர் கடிதங்கள், 7-30 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி ... விருப்பம்.

## பிரயாணிகள் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

கொடிகாமத்திற்கும் சாவகச்சேரிக்குமிடையில், பாடசாலை பஸ்சேவை வேண்டும் என்று மீசாலை பிரயாணிகள் சங்கம், யாழ்ப்பாண கிழக்கு டிப்போ அத்தியட்சகரிடம் கேட்டுள்ளது.

சாதாரண பஸ்களில் நெருக்கடி காரணமாக தினமும் மீசாலையிலிருந்து சாவகச்சேரிக்கு பல மாணவ மாணவிகள் நடந்து செல்கிறார்களென்றும், பாடசாலை முடிந்தபின்பும் இதே நிலைதான் நீடிக்கிறதென்றும், விரைவில் பாடசாலைசேவையை ஆரம்பிக்கும்படியும் சங்கம் கேட்டுள்ளது.

## துறைமுகவேலைகள் பாதிக்கப்பட்டன

திருகோணமலை, சனி

திருகோணமலைத் துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதி வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன. இதைத் தொடர்ந்து துறைமுகத்தில் வேலை செய்யும் இரண்டாயிரத்துக்கு அதிகமான ஊழியர்களுக்கு வேலைநீக்க அறிவித்தல்கள் வழங்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

ஏற்கனவே சுமார் ஐந்நூறு தொழிலாளர்களுக்கு மேற்பட்டவர்களுக்கு வேலைநீக்க அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் இலங்கை வர்த்தக ஊழியர்களின் வேலைநிறுத்தத்தைத் தொடர்ந்தே துறைமுகத்தில் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

## குளங்கள் நிரம்பின

முருங்கன், சனி

முருங்கன் வட்டாரத்திலுள்ள குளங்கள் யாவும் கடும்மழைகாரணமாக நிரம்பியுள்ளன. குளங்களுக்கருகில் வசிக்கும் மக்கள் பல கஷ்டங்களையும் எதிர்நோக்கியுள்ளனர்.

## விளம்பரம்

### கேள்வி விளம்பரம்

மூளாய் சுடலையில் புதிய மடம் கட்டுவதற்குச் சீல்வைத்த கேள்விப்பத்திரங்கள் அச்சுவேலி கிராமசபை அக்கிராசனரால் 3-12-66ந் திகதி சனிக்கிழமை காலை 9-30 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பிணைப்பணம் ரூபா 25/-ம், பத்திரப்பணம் ரூபா 5/-ம் கட்டியதன்பேரில் 2-12-66ந் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரையும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

ஏனைய விபரங்களை இ. ச. கந்தோரில் அறிந்துகொள்ளலாம்.

சி. த. சபாரத்தினம்,
தலைவர்,
கிராமசபை,
அச்சுவேலி.

கிராமசபைக் கந்தோர்,
அச்சுவேலி,
17-11-66 1892

## மீன்பிடிச் சங்க உத்தியோகத்தர்கள்

காரைநகர், வெள்ளி

தோப்புகாட்டில் வசிக்கும் மீனவ இளைஞர்களின் தோப்புக்காடுகூட்டுறவுமீன்பிடிச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உத்தியோகஸ்தர்களாகபின்வருவோர்தெரிவு செய்யப்பட்டுள்ளனர்,

தலைவர் திரு. வீரகத்திப்பிள்ளை. உபதலைவர்: திரு. நா. குலசேகரம். காரியதரிசி திரு. வ. கருணைநாதன். உபகாரியதரிசி திரு மு. செந்திவேல். தனாதிகாரி திரு க. யோகரத்தினம். நிர்வாக சபைஅங்கத்தவர்களும்தெரிவு செய்யப்பட்டனர்.


# யாழ். நுண்கலைத் தொழிற் பாடசாலை

**இளைஞர் சமூக பொருளாதார முன்னேற்ற மன்றம்**
**கில்னர் மண்டபம்—வண்ணார்பண்ணை**

பின்வரும் பாடங்கள் கற்பதற்கு பிரவேச விண்ணப்பங்கள் 5-1-67 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்

| | | |
|---|---|---|
| 1. | மோட்டார் இயந்திரம் திருத்துதல் | 2 வருடங்கள் |
| 2. | றேடியோ திருத்துதல் | 2 ,, |
| 3. | மின்சார இணைப்பு வேலை | 1 வருடம் |
| 4. | வர்த்தக, தட்டச்சுப் பாடங்கள் | 1 ,, |
| 5. | போட்டோ படம் பிடித்தல் | 6 மாதங்கள் |
| 6. | நீர்விநியோக இயந்திரக்கலை— இணைப்பு முறை | 6 ,, |
| 7. | தச்சு வேலை | 6 ,, |
| 8. | கொல் வேலை | 6 ,, |
| 9. | நெசவுவேலை-நெசவுதொழில் நிலையம் 32 கொழும்புத்துறைறோட், சுண்டிக்குளி, (தங்குவதற்கு வசதியுண்டு) | |
| 10. | தையல் வேலை—தையல் நிலையம் பலாலிறோட், திருநெல்வேலிதெற்கு. | |

பிரவேசகட்டணம் ரூபா 5-00

வைப்புப் பணம் (Deposit) ரூபா 25-00

மாதாந்தக் கட்டணம் 1, 2, 3, பாடங்கள் மாதம் ரூபா 12-00

மாதாந்தக் கட்டணம் 4, 5, 6, 7, 8, 10, பாடங்கள் மாதம் ரூபா 5-00

**விண்ணப்பக்காரர் நேர்முகப் பரீட்சை 10-1-67 காலை 9 மணிக்கு நடைபெறும்**

1. மேற்படி கந்தோரில் விண்ணப்பப்பத்திரங்களும் வேறு விபரங்களும் பெற்றுக்கொள்ளலாம்
2. 23-12-66க்கு முன் விலாசமிட்ட 10 சத முத்திரையுள்ள என்வலப் அனுப்பி விண்ணப்பப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

சிவ. உ. சோமசேகரம் — கௌரவ தலைவர்
வ. சத்தியநாதன் — கௌரவ காரியதரிசி

இளைஞர் மன்றம்
26, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.
9-11-66. 1881


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பண்டையச்சிறப்பை பேணவேண்டும்'

## இந்திய ஜனாதிபதி கோரிக்கை

புதுடில்லி, நவ. 19

"நாட்டின் கடந்தகால சிறந்தவடிவத்தை மக்கள் எண்ணிப்பார்த்து அதைப் பேணிக்காக்க முற்பட வேண்டும். நாட்டில் இடம் பெற்ற சமீபத்திய சம்பவங்களால் பிறர் நம்மைக் குறைத்து கணிக்கக் கூடியதொரு நிலை ஏற்பட்டுள்ளதுபோல் தெரிகிறது. இந்த நிலைமை மாற்றியமைக்க கட்டுப்பாடும், கடும் உழைப்பும் நம்மிடையே ஏற்படவேண்டும்.

இவ்வாறு இருபெரும் யுத்தங்களில் சேவை புரிந்த ராஜ்புத் அணியினருக்கு புதியகொடிவழங்கி கௌரவித்துப்பேசிய இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் எடுத்துக்கூறினார்.

அவர் மேலும்பேசுகையில் கூறியதாவது:

போரில்லா உலகை உருவாக்க பலர் பணிபுரிந்து வருகின்றனர். ஆனால் இது ஒரு நீண்டதூர பயணம் போன்றே இருக்கிறது.

நாட்டில் கஷ்டத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சிப்பது எவருக்குமே நன்மை ஏற்படுத்தப்போவதில்லை. மாணவர்கள் ஒழுங்குடனும் கட்டுப்பாடுடனும் நடந்து கொள்வது மிகவும் அவசியமானதொன்று.

# அராலிக்கு தனியான கிராமசபை?

வட்டுக்கோட்டை, சனி

அராலிக்கு தனி கிராம சபை வேண்டுமென கேட்டது நியாயமான கோரிக்கையென்றும் விரைவில் அரசாங்க வர்த்தமானியில் அறிக்கை வெளியிடப்படுமென தலஸ்தாபன மந்திரி திரு எம். திருச்செல்வம் தம்மை அராலி மக்கள் சார்பில் சந்தித்த தூதுகோஷ்டியிடம் உறுதி கூறியுள்ளார்.

அராலி தலைமைச் சமிதித் தலைவர் திரு கே. சுப்பிரமணியம் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார்

வட்டுக்கோட்டை கிராம சபையின் இருபது வட்டாரங்களில் எட்டு வட்டாரம் அராலிக் கிராமத்தில் இருப்பதால் அராலிக்கு தனிகிராம சபையொன்று நிறுவ வேண்டுமென உள்ளூராட்சி அமைச்சரை அராலி வாசிகள் மகஜர் ஒன்றின் மூலம் கேட்டிருந்தனர்.

இக்கோரிக்கையைவட்டுக்கோட்டை தொகுதி பாராளுமன்ற பிரதிநிதிதிரு அமிர்தலிங்கமும், வலி மேற்கு இராமாதிகாரியும், கோரிக்கைநியாயமானதும் பொருத்தமுள்ளதெனவும் சிபார்சு செய்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## மிகிர்சென் அரசியலில் குதிப்பார்

கல்கத்தா, நவ. 18

இனி கடலில் நீச்சலடிப்பதை விட்டு அரசியலில் நீச்சலடிக்கப்போவதாக நீண்டதூர நீச்சல் வீரர் திரு. மிகிர்சென் இங்கு அறிவித்துள்ளார்.

அமெரிக்காப் பயணத்தை முடித்துக் கொண்டு கல்கத்தா "டம்டம்" விமானநிலையத்துக்கு வந்தபோது அவருக்குப் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்போது தான் அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

## அரசுவாலடன் ஓய்வு பெற்றார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கொழும்பில் கூடுதல் மாவட்ட நீதிபதியாக கடமையாற்றிய திரு. அரசுவாலடன் சென்ற மாதம் தனது பதவியிலிருந்தும் இளைப்பாறியுள்ளார். அவர் யாழ்ப்பாணத்திலும் மற்றும் பல இடங்களிலும் மாஜிஸ்டிரேட்டாகவும், மாவட்ட நீதிபதியாகவும் கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சேவையிலிருந்தும் இளைப்பாறிய பின்னர் திரு. வாலடன் தற்பொழுது வழக்கறிஞராக யாழ்ப்பாணத்தில் தொழில் புரிந்து வருகிறார்.

## நவீன வெள்ள பாதுகாப்பு

லண்டன், நவ. 19

சாம்ராஜ்ய காரியாலயத்தின் அழைப்பின் பேரில் சமீபத்தில் பிரிட்டனுக்கு விஜயம் செய்த இலங்கைஉள்ளூராட்சி மன்ற தூதுக்கோஷ்டியினர் பிரிட்டனில் மேற்கொள்ளப்பட்டு வரும் நவீன வெள்ளப் பாதுகாப்பு முறைகளைப் பார்வையிட்டனர். மட்டக்களப்பு நகரசபைத் தலைவர் திரு. ஜே. எஸ். திசவீரசிங்கம், பதுளை மேயர் திரு. எம். ரத்வத்தை, நுவரெலியா பட்டினசபைத்தலைவர் திரு. பி. டி. அலெக்ஸாந்தர், மிரிகம பட்டினசபைத் தலைவர் திரு. ஜே. அமரதுங்க ஆகியோர் இந்தக் கோஷ்டியில் அடங்கியுள்ளனர்.

## ரசலுக்கு, ஹோ பாராட்டு

ஹாங்கொங், நவ. 19

வடவியட்னாம் அதிபர் திரு. ஹோஸிமின் பிரிட்டிஷ் தத்துவப் பேராசிரியர் பேர்ட்டன் ரசலுக்கு பாராட்டுதல் தெரிவித்துள்ளார்.

வியட்னாமில் அமெரிக்கா செய்துவருவதாகக் கூறப்படும் போர் குற்றங்கள் சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்காக, நீதிமன்றமொன்றை உருவாக்குவதற்காக பேர்ட்டன் ரசல் எடுத்த முயற்சியைப் பாராட்டியே திரு. ஹோஸிமின் செய்தி அனுப்பியுள்ளார்.

பாகிஸ்தானில்

## பத்திரிகைகள் மீது கட்டுப்பாடு

கராச்சி, நவ. 19

பாகிஸ்தானில் பத்திரிகைகள் மீது கட்டுப்பாடுகளை விதிக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. பாதுகாப்பு விதிகளின் கீழ் அரசாங்கத்தின் புதிய அதிகாரம், ஒரு பத்திரிகை அச்சிட்டு வெளியிடும் அச்சு இயந்திரசாலையை பறிமுதல் செய்யவும் வழி செய்கிறது.

இந்த அதிகாரத்தின்கீழ், எதிர்க்கட்சி வங்காள தினசரி பத்திரிகை ஸ்தாபனமொன்று பறிமுதல் செய்யப்பட்டது.

## இந்தியப் பெண் உலக அழகி

லண்டன், நவ. 19

முதல் தடவையாக 23 வயது பாரதப் பெண்மணியொருவர் உலக அழகியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். லண்டனில் 61 நாட்டு அழகிகள் கலந்து கொண்ட உலக அழகிப் போட்டியிலேயே இவர் முதல்பரிசைத் தட்டிக் கொண்டுள்ளார். உலகஅழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட செல்வி ரீட்டாபரீதா மருத்துவக்கல்லூரி மாணவியாவார் இரண்டாவது இடம் யூகோஸ்லேவியா நாட்டுஅழகிக்கும் மூன்றாவது இடம் கிறீஸ்நாட்டு அழகிக்கும் கிடைத்துள்ளது.

## இத்தாலிய வெள்ளச் சேதம்

ரோம், நவ. 19

வட இத்தாலியில் இம்முறை ஏற்பட்ட வெள்ளச் சேதம் இங்கு இரண்டாவது உலக யுத்தத்தின்பின் ஏற்பட்ட பெரியதொரு சேதம் என இத்தாலிய பிரதமர் திரு. அல்டோ மொரோ பார்லிமெண்டில் தெரிவித்தார்.

## ஜசனேவரின் ஆசிய விஜயம்

நியூயோர்க், நவ. 19

முன்னைநாள் அமெரிக்க ஜனாதிபதி திரு. ஐசனேவர் அடுத்த வருடத்தில் ஆசிய நாடுகளில் சுற்றுப்பிரயாணமொன்றை மேற்கொள்ள இருக்கிறார்.

சங்கானையில்

## பொலிஸாரை எதிர்நோக்கும் கஷ்டம்

சங்கானை, சனி

எண்பதினாயிரம் மக்கள் தொகையையும் 49 சதுர மைல் உள்ளதும் யாழ்ப்பாணத்தில் கூடிய குற்றங்கள் நிறைந்த பகுதி என்று கூறப்படும் சங்கானையில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு அரசாங்கத்தால் மாதமொன்றுக்கு 19 கலன் பெட்ரோல் மாத்திரமே விநியோகிக்கப்படுகிறதென்றும் இதனால் இப்பகுதிக்குப் பொலிஸார் தகுந்தமுறையில் தங்கள் கடமைகளைச் செய்யமுடியாத நிலையில் உள்ளனர். என்றும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வீதியின் சீர்கேடு

பூநகரி, சனி

சங்குப்பிட்டியிலிருந்து பூநகரிக்கும், பூநகரியிலிருந்து பரந்தனுக்கும் இடையிலான வீதி மிகவும் மோசமான நிலையிலிருக்கின்றது. இந்த வீதியில் எந்த இடத்தைப்பார்த்தாலும் பள்ளமும் திட்டியுமாக இருப்பதால் மழை காலத்தில் வீதியில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. இப் பாதையில்போக்குவரத்துச் செய்வதே பெரும் கஷ்டமாக இருக்கின்றது.

## களைபிடுங்கு விழா

வரணி, சனி

யாழ்ப்பாணம் வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் கிருஷிகபோதனாசிரியர் திரு பி. செல்வரத்தினம் தலைமையில், சாவலப்பிட்டி வயல் வெளியில் களைபிடுங்கினர். கிராம சேவையாளர் திரு. அம்பலவாணர் உட்பட பெற்றோர் - ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளும், பயிர்ச்செய்கைக் குழுவினரும் இவ்விழாவுக்கு சமூகமளித்திருந்தனர்.

ஜோர்டான் மீது

# இஸ்ரேல் தாக்குதலுக்கு இந்தியா கண்டனம்

புதுடில்லி, நவ 19

சென்றவாரத்தில் ஜோர்டானில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலுக்கு இந்தியா பலத்த கண்டனம் தெரிவித்துள்ளது.

இத்தாக்குதலின் போது ஒரு பாடசாலையும் ஒருவைத்திய நிலையமும் சேதப்படுத்தப்பட்டன. மிகவும் கண்டிக்கப்படத்தக்கது என இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

'இந்தமாதிரியான பலாத்கார செயல்களால் இஸ்ரேல் அரசாங்கம் உலகநாடுகளின் பலத்த எதிர்ப்பைத் தேடிக்கொள்ளும் என்பதை நாம் எடுத்துக்கூற விரும்புகிறோம்' எனவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

ரொடீஷியா விவகாரம்

# பிரிட்டிஷ் பிரதமர் அறிக்கை வெளியிடுவார்

லண்டன், நவ 19.

ரொடீஷியா சம்பந்தமாக பிரிட்டிஷ்பிரதமர் திரு. வில்சன் அடுத்தவாரத்தில் அறிக்கையொன்றை வெளியிடவிருக்கிறார். அநேகமாக புதன் அல்லது வியாழக்கிழமை இந்த அறிக்கையை அவர் வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படவிருக்கிறது.

ரொடீஷியாவில் சட்டவிரோத ஆட்சி செலுத்தும் திரு. சிமித் பிரிட்டனின் நிபந்தனைகளுக்கு உடன்பாட்டுக்கு வராததால் காமன்வெல்த் பிரதமர்களுக்கு கொடுத்தவாக்குறுதியை பிரிட்டன் காப்பாற்றிக் கொள்ளவும், ஐ. நா நிறைவேற்றிய தீர்மானத்துக்கு இணங்கவும் சில தீவிரநடவடிக்கைகள் எடுக்கப்படவிருப்பதாகவும் பிரதமர் வில்சன் தமது அறிக்கையில் இதுபற்றி தெரிவிப்பார் எனவும் நம்பப்படுகிறது.

## பல்கேரியா கண்டனம்

சோபியா, நவ. 19

வியட்னாமில் அமெரிக்கத் தாக்குதலுக்கு பல்கேரிய கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

'வியட்னாமில் ஆக்கிரமிப்பு நடவடிக்கை மேற்கொண்டுள்ளவர்கள் தாம் செய்யும் குற்றங்களுக்கு மக்கள் முன்னிலையில் பதில் கூறவேண்டி வரும்' என பல்கேரிய கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது.

வடவியட்னாமியராலும் வியட்காங்கியராலும் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை அங்கீகரிப்பதே வியட்னாமில் சமாதானத்தை நிலைநாட்ட உதவுவதாக இருக்கும் என கம்யூனிஸ்ட் கட்சி மேலும் குறிப்பிட்டுள்ளது.

## கையும் களவுமாகப் பிடிபட்டார்

உடுப்பிட்டி, சனி

நள்ளிரவில் ஆடொன்றைக் களவாடிச்சென்ற ஒருவர் வழியில் சந்தேகத்தின் மீது பொலிசாரிடம் சிக்கிக்கொண்டார். கரணவாய் தெற்கு வலவன் தோட்டம் என்னுமிடத்தில் சுப்பிரமணியம் என்பவருக்குச் சொந்தமானஆடொன்றை நள்ளிரவில் கடத்திச் சென்றதாக சந்தேகத்தின் மீது கரணவாயைச்சேர்ந்தவெள்ளையன் என்பவர் வல்லையில் வல்வெட்டித்துறைப்பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

## துணிகரதிருட்டு

கொடிகாமம், சனி

கச்சாயைச் சேர்ந்த திருமதி காராளபிள்ளை வீட்டில் நள்ளிரவில் திருடர்கள் புகுந்து பெறுமதியான பலதங்க நகைகளைத் திருடிச் சென்றுவிட்டனர் என்றும் திருடர்கள் திருமதி. காராளபிள்ளையைக் கயிற்றினால்கட்டி, வாயில் துணியைச்செலுத்திவிட்டே திருடியதாகவும் பொலிஸாரில் புகார் செய்யப்பட்டுள்ளது.

வீட்டிலிருந்த வேலைக்காரச்சிறுமி காலையில் எழுந்ததும் எசமானியின் நிலை கண்டு சத்தமிட்டதாகவும் அயலவர்கள் ஓடிச்சென்று திருமதி காராளபிள்ளையை அவிழ்த்து விட்டதாகவும் கூறப்பட்டது. சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

## "நமதுகையே நமக்குதவி"

பூநகரி, சனி

பூநகரி மாணவர்களின் களைபிடுங்குவிழாவை அதிபர் திரு சிவானந்தம் ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் நமக்குத் தேவையான உணவை நமது நாட்டிலே உற்பத்திசெய்தால் அதிகம் கவலையடையத் தேவையில்லை என்றும் வெறும் ஏட்டுக்கல்வியை நம்பியிராது நாட்டுக்கேற்ற தொழிற்கல்வியிலே நாட்டம் கொள்ள வேண்டுமென்றும் கூறினார்.

கிருஷிகப் போதனாசிரியர் திரு நித்தியானந்தன் பேசுகையில் இலங்கையின் பொருளாதாரம் இளம் விவசாயிகள் கையில்தான் தங்கி இருக்கிறதென்றுகூறினார்.

## தமிழ் மாணவர்கள் கல்விச்சுற்றுலா

நாவலப்பிட்டி, சனி

கம்பளை அட்டபாகைதர்மகீர்த்தி மகாவித்தியாலயத்தின் தமிழ்ப்பிரிவு மாணவர்கள் முதல்தடவையாக கல்விச்சுற்றுப் பயணமொன்றிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இலங்கையில் சரித்திரப் பிரசித்திபெற்ற இடங்கள் ஆலயங்கள் ஆகியவற்றை இவர்கள் தரிசித்து வந்தனர். இதற்கான ஏற்பாடுகளை ஒரு முஸ்லிம் ஆசிரியர் ஒழுங்குசெய்திருந்தார்.

## சமயசொற்பொழிவு

நாவலப்பிட்டி, சனி

மதுரை ஆதீனம் செஞ்சொற் செம்மணி திருமதி. மா. சண்முகவல்லி அம்மையார் 'முருகும் தமிழும்' என்ற விடயம்பற்றி, நாவலப்பிட்டி நகரமண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமைஒரு சமயச்சொற்பொழிவுநிகழ்த்துவார்.

## விவசாயிகளுக்கு உதவி

புதுக்குடியிருப்பு, சனி

புதுக்குடியிருப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், 1966-67ம் ஆண்டுக்குரிய விதைநெல், பசளை, முட்கம்பி ஆகியவைகளைக் கடனாக இப்பொழுது வழங்கி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

இன்றைய சூழ்நிலையிலே சண்டைகளும் போராட்டங்களும் நிறைந்திருப்பதற்குக் காரணம், உண்மையான பிரார்த்தனை உணர்ச்சி இல்லாதது தான். இதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை. கோடிக்கணக்கானவர்கள் தொழுகிறார்கள் தான். ஆனால் உண்மையான வழிபாடு செய்பவர்கள் எவ்வளவு?

—மகாத்மா காந்தி.


# ஈழநாடு

EELANADU National Tamil Daily, Post Box 49 JAFFNA.
Telegrams: EELANADU Jaffna; Telephone 327

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு கார்த்திகை மீ 5 உ (20 11 66)


## வர்த்தகக் கொள்கை

அத்தியாவசியப் பொருள்களுக்குள்ள தட்டுப்பாட்டை நீக்கவும் விலைவாசி உயர்வைத் தடுத்து வாழ்க்கைச் செலவு உயர்வுப் பிரச்னையை நீக்கவும், ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா எடுக்கும் முதல் நடவடிக்கை, வர்த்தகத்தில் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்திடம் விடப்பட்டுள்ள ஏகபோகத்தைக் குறைத்து தனியார் துறையினருக்கும் வர்த்தக உரிமைகள் சிலவற்றை அளிப்பதுதான். வர்த்தகர்களுக்கு வர்த்தக உரிமையை அளிக்கும் விவேகமான இந்த நடவடிக்கை, மிக விழிப்புடன் செயல்படுத்தப்பட வேண்டியதாகும்.

விற்பனைக்காக, பொது மக்களின் பாவனைப் பொருள்களை வர்த்தகர் ஒருவர் கொள்முதல் செய்யும்பொழுது அதன் கொள்முதல் விலையையும் அதை என்ன விலைக்கு விற்றால் எவ்வளவு லாபம் கிடைக்கும் என்பதையும் மட்டும் பார்ப்பதில்லை. அந்தப் பொருள் தரமானதுதானா, இதர இடங்களில் குறைந்த விலையில் கிடைக்கக்கூடிய அதே பொருளானாலும் தரத்தில் கூடியதாக இருப்பதால் சிறிது விலை அதிகமானாலும் விலை போகாதா? என்பது பற்றியெல்லாம் ஆலோசனை செய்துதான் அதை வர்த்தகர் கொள்முதல் செய்வார். ஆனால் இதே வர்த்தகத்தை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள அரசாங்க வர்த்தக ஸ்தாபனம் செய்வதானால் இத்தனை சிரத்தை எடுக்குமா? அரசாங்கத்தில் சம்பளம் வாங்கும் ஓர் அதிகாரி, பொருள்களைக் கொள்முதல் செய்வதற்காக அனுப்பப்பட்டால், அவர் குறைந்த விலையைப் பற்றித்தான் கவனம் செலுத்துவாரேயொழிய, பொருளின் தரத்தைப் பற்றிக் கவலைகொள்ளமாட்டார். அவர் கொள்முதல் செய்யும் பொருள் நாட்டுக்கு வந்துசேர பல மாதங்களாகவும்; அவை வந்து சேரும்போது பாவனைக்கு உதவாதவையாகவும் இருக்கக்கூடும். இது தவிர இந்தக் கொள்முதல் பணியில் ஈடுபடும் அதிகாரிகள் சிலர் ஊழல்களுக்குள்ளாகவும் நேரிடலாம்.

அரசாங்கம் வர்த்தகத்திலீடுபடும் பொழுது அது தேசியமயம் என்ற பெயரில் இருந்தாலும் உண்மையில் அதிகார வர்க்கத்தினரின் வர்த்தக மாகிவிடும். இதனால் ஊழல் அதிகரிக்கும். மக்களுக்குப் பயனில்லை. வர்த்தகம் வர்த்தகர்களிடம் விடப்படவேண்டும். அரசாங்கம் நிர்வாகத்தைச் செய்யவேண்டும். ஆனால் வர்த்தகர் சிலர் பொதுமக்களின் நலனைச் சிறிதும் கவனத்தில் கொள்ளாது கொள்ளைலாபம், பதுக்கல் முதலிய சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவது உண்மை. எனவே வர்த்தகத்தில் ஒரு பகுதியை அரசாங்கக் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்திடமும் மற்றொருபகுதியை தனியார் துறையிடமும் விட்டு, வர்த்தகத்துக்கே அவசியமான போட்டியை ஏற்படுத்த முன்வந்துள்ள ராஜாங்க அமைச்சரின் திட்டம் விவேகமானது; நாட்டின் பிரச்னையைக் குறைக்கக் கூடியது.

ஆனால் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு எல்லா வர்த்தகர்களுக்கும் அனுமதி வழங்க முடியாது. இதற்கு அந்நிய செலாவணி இடம் கொடுக்காது. 'கோட்டா' முறையில் சில வர்த்தகர்களுக்கே இந்த உரிமை வழங்கப்படும். இதில் பாகுபாடு காட்டப்படுவதாகப் புகார் கிளம்ப இடமளிக்கலாகாது. வர்த்தகர்களுக்கும் கட்சி ஆதரவு வர்த்தகர், இலங்கை வம்சாவழி வர்த்தகர், பதிவுப் பிரஜை வர்த்தகர், சிங்கள வர்த்தகர், தமிழ் வர்த்தகர் என்ற பாகுபாடு தோன்றலாம். இவற்றுக்கு இடமளிக்காது வர்த்தகம் என்ற ஒன்றையே கருதி அமைச்சர் தமது திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும்.

நாட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களையே இறக்குமதி செய்ய அனுமதியளிக்கப்பட வேண்டும். ஆடம்பரப் பொருள்களுக்காக நம்நாட்டுப் பணம் வெளியேசெல்வது அநியாயம்; அக்கிரமம். இதே சமயம் தமது நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை, அவற்றின் உற்பத்திக்கு ஊக்கமளிப்பதுடன், அதே பொருள்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கவும் கூடாது.

## நாவடக்கம் வேண்டும்

"யாகாவாராயினும் நாகாக்க, காவாக்கால், சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு" என்பது தமிழ்மறை. இதைநமது மந்திரிகள் அனைவரும் அறிந்திருக்கவில்லை யென்பது, அமைச்சர்கள் பொதுமேடைகளில் 'அளவோடு' பேசவேண்டும் என்று பிரதமர், அவர்களுக்கு விடுத்துள்ள எச்சரிக்கையிலிருந்துதெளிவாகிறது.

வள்ளுவர் வாக்கை அமைச்சர்கள் அறிந்து கொள்ளவில்லையானாலும், நாவடக்கமின்றி கண்டதையும், கண்ட கண்ட இடங்களில் சில அமைச்சர்கள் பேசித் திரிந்தது, அரசாங்கத்தைத் தர்ம சங்கடத்திலாழ்த்தவும் நடைபெற்று முடிந்த இடைத் தேர்தல்களில் ஆளும்கட்சிக்குத்தோல்வி ஏற்படவும் காரணமாக இருந்ததையாவது இன்னும் உணராதிருப்பது விந்தையே. அமைச்சர்கள் அரசாங்கத்தின் கொள்கையை வகுப்பவர்கள். அவர்களுக்குள் சில முக்கியமான விஷயங்களில் கருத்து வேற்றுமை ஏற்பட்டால் அதை அமைச்சரவைக்குள்ளேயே தீர்த்துக்கொள்ள வேண்டும். ஓர் அமைச்சர் முக்கியமான விஷயம் பற்றி மசோதா தயாராகி விட்டதென பொது மேடையில் கூறுவதும்மற்றோர் அமைச்சர், அப்படி ஒரு மசோதா கிடையாது; அதை நான்பார்க்கவும் இல்லை என்று கூறுவதும் அமைச்சர்களுக்கல்ல; அரசாங்கத்துக்கே நல்லதல்ல; தீங்கு விளைக்கக்கூடியதுமாகும். அரசாங்கத்தின் கொள்கைகளையும் திட்டங்களையும் தவிர, தங்கள் தங்கள் கருத்துக்களை பொது மேடைகளில் அமைச்சர்கள் பேசுவது கூடாது.

தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டுவதற்கு முதல் தேசிய அரசாங்கத்தில் ஐக்கியம் நிலவுகிறதென்பதை மக்களுக்கு உணர்த்தவேண்டும். இதைநிலை நிறுத்த முடியாதவர்கள் அமைச்சர் பதவிகளிலிருந்து விலகுவதே நன்று.

# இந்துசமூகம்தீர்மானிக்கவேண்டிய சில அவசர விஷயங்கள்

இப்பொழுது தமிழ்ப் பொதுமக்கள் முன்பாக சில அவசர விஷயங்கள் இருக்கின்றன. அவைவிசேஷமாக தமிழ் மக்களைப் பற்றியவை. இதேசமயம் இவை இலங்கையையும் பொதுவாகப் பாதிக்கக்கூடியவை. இதில் ஒரு பிரச்னை சாதி முறையைப் பற்றியதாகும். நெடுங்காலமாக இருந்து வரும் இம்முறையைப்பற்றி கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். என்றாலும் இம்முறை சமூக வாழ்க்கையோடு நெருங்கி பின்னப்பட்டுள்ளதால், இது நம்மக்களின் சமூக அரசியல், பொது, சமய, பொருளாதார விஷயங்கள் பாதிப்பதாகவுள்ளது.

—தமிழன்—

மக்கள் அனைவரும் சகோதர, சகோதரிகள் என்பது பண்டைத் தமிழர்களின் கொள்கையாகும். எல்லாச் சமயங்களும் இதை ஆதரிக்கின்றன. சாதி காரணத்தால் ஒருவர் மற்றவருக்கு மாறுகளையும் செய்யப்படாதென்பதும் அக்கொள்கை விடக்கும். அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகிய திருமூலநாயனாரும் "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்று அறிவுறுத்தியுள்ளார். இந்தப் புராதனக் கொள்கை நெடுங்காலமாக இந்துக்களுக்கு ஆர்வமளிக்கும்மூலாதாரமாக இருந்து வருகின்றது. இலங்கையிலிருந்து ஒரு தமிழ் அன்பர் சமீபத்தில் இந்திய ஜனாதிபதியான டாக்டர் ராதாகிருஷ்ணனைக் கண்டபோது, அவர் மேற்குறித்த தமிழ் வாக்கியத்தைக்கூறி சாதியின் பெயரால் ஒருவர் மற்றவருக்கு எவ்வித பாதகமும் செய்யப்படாதென்றும், தமிழனின் முன்னேற்றத்துக்கு இது அவசியமென்றும் கூறியது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தியாவின் ஒப்பற்ற தேசிய ஞானியான சுவாமி விவேகானந்தரும், மகாத்மாகாந்தியும் இந்து சமூகத்திலே உதித்த மகான்கள். அவர்களது உபதேசங்களும், வாழ்க்கையும் இலங்கை உள்ளிட்டு உலக மக்களின் மனதைக் கவர்ந்துள்ளன. அவர்களும் சாதியின் பெயரால் யாரையும் வேற்றுமைப்படுத்தக் கூடாதென்று இந்து மக்களுக்கு எச்சரிக்கை செய்துள்ளனர்.

சாதிமுறையின் பெயரால் இன்று அனுசரிக்கப்படும் காரியங்களில் சில, மனிதாபிமானத்துக்கு மாறானதென்பதை விளக்கத் தேவையில்லை. அவை மனிதருக்குச் செய்யும் குற்றமுமாகும். அவை தெய்வமே நமது அம்மையப்பர் என்பதையும், மனித சகோதரத்துவத்தையும் மறுப்பதாகவுள்ளன. சாதி வேறுபாடுகளுக்கு சமய ஆதரவும் பயமும் காட்டப்படுகின்றன. இந்த ஆதரவும்பயமும் இக்காலத்தில் நீடிக்கப்படுவது சரியா? இதனால் இந்து சமூகமும், சமயமும் எவ்வளவு பலவீனமடைந்து வருகின்றன. என்பதை நிதானமாக ஆலோசிக்க வேண்டும்.

இந்தப் பிரச்னையின் எல்லா அம்சங்களையும் உடனடியாகவும்வெற்றிகரமாகவும் எல்லாருக்கும் திருப்தியானதுமான முறையில் தீர்க்கலாமென்பதும் சுலபமன்று. அமைதியான முறையிலே படிப்படியாக வேநாம இதைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தாலே நிரந்தரமான நன்மைகள் ஏற்படும். நீதியான முடிவுகள் ஏற்பட, நீதியான முறைகளும் கையாளப்பட வேண்டும். இந்துக் கோவில்களிலே இந்து சமயத்தைச் சேர்ந்த எல்லாப் பிரிவினரும் தெய்வ வழிபாட்டில் கலந்து கொள்ள முயல்வது இந்து சமய வாழ்விலே ஒரு முக்கியமான அம்சமாகும். சாதி காரணமாக இந்துக்களில் எந்தப் பிரிவினருக்கும் கோவில்களில் வழிபட உரிமையும் சந்தர்ப்பமும் மறுப்பது, அன்பை அடிப்படையாகக் கொண்ட சமய தர்மத்துக்கு மாறாகும். குருமார்களும் கோவில் நிர்வாகிகளும் உள்ளிட்டு இந்து சமய சமூகத்தைச் சேர்ந்த எல்லாப் பிரிவினரும், எல்லா இந்துக்களுக்கும் பிறப்பால் வேற்றுமை காணாது, கோவில்களில் வந்து வழிபட பூரண வசதிகள் அளிப்பதன்மூலம் அவர்கள் மிக மேலானதோர் சமய கைங்கரியத்தைச் செய்தவர்களாவர்.

ஆலயங்களில்வழிபடுபவர் சில ஆசாரங்களை அனுஷ்டிக்க வேண்டுமென்று நமது புராதன ஆகமங்களில் வகுத்துள்ளது உண்மையே. இக்காலத்துக்கு அனுபவரீதியான முறையிலே அந்த ஆசார அனுஷ்டானங்களை கூடுமானவரை கோவிலுக்குச் செல்லும் இந்துக்கள் கடைப்பிடிக்க வேண்டியதே. இக்கலியுகத்திலே அவ்வப்போதைய சூழ்நிலைக்குத் தக்கபடி சாஸ்திரங்களில் தேவையான திருத்தங்களைச் செய்யவும் இடம் இருக்கிறதென்பது குறிப்பிடத்தக்கது.

(5-ம் பக்கம் பார்க்க)

# ஐயாறன் எழுதுவது

சுவாமி ரங்கநாதானந்தா இன்று யாழ்ப்பாணம் வருகிறார். கல்கத்தா ஸ்ரீ ராமகிருஷ்ண கலைக்கூடக் காரியதரிசியான சுவாமிஜியின் பேச்சைக் கொழும்பிலே கேட்டேன். ஆங்கிலத்திலே ஆங்கிலேயனும் வியக்கும்படி, கடல்மடை திறந்தது போல் தடதடவென்று சிறிதும் தட்டுத்தடங்கலின்றி பேசுகின்றார்கள். முன்னர் அவர் பேச்சு வேகம் மிக அதிகம். சாதாரணமாகப் பின்பற்றுவது சுலபமன்று. இப்போது வேகம் குறைந்து பின்பற்ற முடிகிறது.

கேரளத்திலே அவதரித்த சுவாமிக்கு பள்ளிப் படிப்பு அதிகமில்லையாம். தனிப் பட்டமுறையில் ஆங்கிலம் கற்றுக்கொண்டு இப்படிப் பேசுவது ஆச்சரியமே. இறையருளே இதற்குக் காரணமென்றும், உள்ளத்திலிருந்து அந்த மகாசக்தி பேசுவதாயும் ஒரன்பர் தெரிவித்தார். இந்துசமயத்தைப் பற்றி வெளிநாடுகளில் நிலவும் பல தப்பெண்ணங்களையும் சுவாமிஜியின் பேச்சுகள் வெகுவாக நீக்கியுள்ளன.

இன்று மாலை யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் சுவாமி அவர்கள் பகவத்கீதையைப் பற்றிப் பேசுகின்றார்கள். ஆங்கிலம் புரிகிறவர்களுக்கு நல்ல விருந்து. புரியாதவர்களும் அவரைத் தரிசிப்பதால், பயன்பெறலாம்.

ஃ ஃ ஃ

சுவாமி அவர்கள் இம்முறை இலங்கைக்கு வருவாரா என்று கடைசிவரை நிச்சயமில்லையாம். டில்லியிலே விசா கிடைத்த சமாச்சாரம், தந்தி மூலம் இலங்கைக்கு அனுப்பியும் அது கிடைக்கவில்லையாம்! டெலிபோன் பயனும் பழுதாகிப் பேசமுடியாது போயிற்று. விமானத்திலிருந்து சுவாமி வந்திறங்கிய பின்தான் எல்லாம் நிச்சயமாயிற்றென்றும் ஒரன்பர் தெரிவித்தார்.

இப்பேர்ப்பட்ட அறிவாளிகளும், சமாதானத் தூதர்களும் ஒரு நாட்டுக்கு மட்டுமல்ல, உலகமனைத்துக்குமே சொந்தமானவர்கள். விசா முதலிய தடைகளின்றி இவர்கள் உலகமெங்கும், சிறப்பாக நம் இலங்கைக்கும் தாராளமாக வந்து செல்ல 'நிரந்தர விசா' அளிக்கமுடியாதா? எப்படியோ அவரைத் தடுக்காமல் வரவிட்டது பெரிய காரியம். அதிகார தேவதைகளுக்குத் 'தாங்க்ஸ்' கூற வேண்டும்.

ஃ ஃ ஃ

கொழும்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனில் நடந்த கூட்டத்துக்கு நீதியரசர் டி. எஸ். பெர்னாண்டோ தலைமைவகித்துப் பேசுகையில் ஒரு விஷயத்தைச் சொன்னார். கொழும்பு பல்கலைக்கழகத்திலே புதிதாகக் கட்டியுள்ள கம்பீரமான மண்டபத்திலே சமீபத்தில் சர்வதேச குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டதாம். சுமார் இரண்டாயிரம்பேர் வரையில் இருக்கக்கூடிய அம்மண்டபத்தில் முப்பதேபேர் தான் இருந்தனராம். அதில் 15 பேர் வெளிநாட்டுத் தூதுவர்கள். மற்ற 15 பேர்களும் விழா சம்பந்தப்பட்ட அதிகாரிகளாம்! எப்படி இருக்கிறது உலக குழந்தைகள் தின விழா!

குழந்தைகளை அழைத்து, விழா நடத்தியிருந்தால் இந்த அவலநிலை ஏற்பட்டிருக்குமா? நேரு ஜயந்தியை குழந்தைகள் விழாவாக நடத்தும் சினிமாப் படம் பார்த்தேன். எவ்வளவு குழந்தைகள் குதூகலமாகக் கலந்துகொண்டனர். உல

(5-ம் பக்கம் பார்க்க).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சிங்கள இனம் என்றும் மறக்கமுடியாத தலைவர்

# சேர் பொன். இராமநாதன்

## நினைவு தினவிழாவில் வில்மட் பெரேரா புகழுரை

உடுவில், சனி

1915ம் ஆண்டில் ஆங்கிலோயரையே கதிகலங்க வைக்கக்கூடிய முறையில் சிங்கள-முஸலிம் இனத்தவரிடையே கலவரம் ஏற்பட்டபோது ஆங்கிலேயர்களினால சிங்களத் தலைவர்கள் கைது செய்யப்பட்டு சிறையிட்டு துன்பப்படுவதைக்கண்டு மனம் பொறுக்க மாட்டாமல் சிங்கள மக்களுக்காக இங்கிலாந்துசென்று மந்திரிகளுடன்பேசி சிங்களத் தலைவர்களை விடுதலை அடையச்செய்தவர் திரு. பொன்னம்பலம் இராமநாதனே. சிங்கள இனம் தம் இறுதிமூச்சுள்ள வரைக்கும் அப்பெரியாரை மறந்துவிடமாட்டாது

நேற்று மாலை உடுவில் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற இராமநாதனின் நினைவுதினவிழாவில்பிரதமவிருந்தினராக கலந்து கொண்டு உரை நிகழ்த்திய திரு. வில்மட் பெரேரா மேற்கண்டவாறு கூறினார். இவ்விழாவுக்கு வடமாநில வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் தலைமைவகித்தார்

திரு. வில்மட் பெரேரா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"இலங்கையில் 19ம் நூற்றாண்டில் தோன்றிய மாமேதைகளில் முதல்வரானவர் சேர். பொன். இராமநாதன். இவர் தமிழ்மக்களுக்கு மட்டுமல்ல சிங்கள - முஸ்லிம் போன்றஏனைய எல்லாமதத்தவர் - இனத்தவர்களுக்கும் தலைவர்-நண்பர்கள். இலக்கியம் தத்துவம், சமூக சீர்திருத்தம், சட்டம் போன்ற துறைகளில் வல்லுனரான திரு. இராமநாதன். இலங்கைச் சட்டத்துறைக் காற்றிய பணி ஏராளம். இவரால் நிறைவேற்றப்பட்டவையனைத்தும் தனியொரு மொழிக்கோ, இனத்துக்கோ மட்டும் நன்மைபயப்பதாக அமையவில்லை. பதிலுக்கு அவை சாதி, சமய, மொழி இன அடிப்படையில் இன்றி பொதுநல மனப்பான்மையோடு நாட்டுப்பற்றுடன் இயற்றப் பட்டனவாகக் காணப்படுகின்றன. இவரது சட்டசபைத்தொண்டு இன்று இலங்கைவாழ் சிங்கள-தமிழ்-முஸ்லிம் ஆகிய எல்லாமதமக்களுக்கும் நன்மையளித்துள்ளது. சட்டசபை உறுப்பினராக இவர் சுமார் 48 ஆண்டுகாலம் சேவையாற்றியுள்ளார். அந்நேரத்தில் ஆங்கிலேயர்கள் 'கூட்' இவரின் பேச்சுக்கு தனிமதிப்புக் கொடுத்தார்கள் என்றால் அதுஇலங்கை மாதாபெற்ற ஓர் அரிய வரப்பிரசாதமே, தமிழ் மொழிக்கும், சைவத்துக்கும் மட்டுமின்றி இலங்கைநாட்டின் நற்பணிக்கும்தான் கூடிய சேவையாற்றியுள்ளார். இராமநாதன் துரையவர்கள் சிங்கள மக்களின் ஒப்புயர்வற்ற ஒருநண்பன். முதலாம் உலக மகாயுத்தம் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், சிங்களமக்கள் கஷ்டநிலையிலிருந்து விடுதலைபெற தம் உயிரையே பணயம்வைத்து இங்கிலாந்துசென்று வெற்றியுடன் திரும்பிய அப்பெரியாரை மட்டுமல்ல அவரின் இனத்தையே சிங்கள மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள். அவர் தம் வாழ்வில் கண்டகனவுகளை நனவாக்குவதே நாம்அவருக்குச்செய்யும் தொண்டாக இருக்கும்.

### அதிகமானவர்கள் கலந்துகொண்டனர்

இமையாணன், சனி

தொண்டைமனாறு செல்வச்சந்நிதி கோவிலில் 'சூரன் போர்' சிறப்பாக நடைபெற்றது. கடந்த வருடங்களிலும் பார்க்க இம்முறை ஏராளமானவர்கள் வந்திருந்தனர். இ. போ. ச. விசேஷ பஸ் சேவைகளை ஒழுங்குசெய்திருந்தது.

## "மத மாற்றத்தை வன்மையாக எதிர்த்தவர்"

"அன்று அமெரிக்கன் மிஷனை" சேர்ந்தவர்கள் இலங்கைமக்களை கட்டாயத்தின் பேரில் மதம்மாற்றிய செயலைக்கண்டு கொதித்து எழுந்து எதிர்த்த இராமநாதன். இன்று வாழ்ந்திருந்தால் இலங்கையில் இன்று மக்களை மதம்விட்டு மதம் மாற்றும் செயலில் ஈடுபட்டிருப்பவர்களையோ, அச்செயலில் பணியாற்றும் கட்சிகளையோ நிச்சயம் கண்டித்து, அச்செயலை கைவிடச்செய்ய முயன்றிருப்பார்" என்று உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் கூறினார்.

"பெரியார்கள் எவ்வழியில், எந்த இலட்சியத்தில் வாழ்ந்தார்களோ அவற்றை பின்பற்றவே நாம் அவர்களுக்கு விழா எடுக்கிறோம். இன்று இராமநாதனுக்கு விழா எடுக்கும் நாம் அவர் காட்டிய பாதையில் நின்று விலகிப்போதல் கூடாது. தான் கொண்டலட்சியமே தன் வாழ்வு என்ற ரீதியில் வாழ்ந்த அவர், அரசாங்க சேவை மூலம் மக்களுக்குப் பணிபுரிந்து இதுதான் அரசாங்கம்; அரசாங்கம் இப்படித்தான் இருக்கவேண்டுமென எடுத்துரைத்து, தவறான வழியில் அரசாங்கம் செல்ல முற்படுகையில் அதை தடுத்துநிறுத்தி நேர்வழியில் செல்ல வழிசெய்த பெரியார் அவர். அந்நியர் ஆதிக்கத்தின் கீழ்கூட தான் ஒரு தமிழன் அதிலும் இந்து மதத்தவன் என்பதை நிலை நாட்டத்தவறவில்லை 1928ம் ஆண்டு நவம்பர் மாதம் சட்டசபையில் அக்மார் கொண்டுவந்த "இலங்கை முழுவதற்கும் ஒரேயொரு சர்வகலாசாலை வேண்டும்" என்றபிரேரணையை முழுமூச்சுடன் எதிர்த்தார். இப்பிரேரணையால் எல்லா சமூகத்தவரும் பயனடையமுடியாது என்பதே அவர்கருத்து. பதிலுக்கு சகலஇன சமூக மக்களும் கல்வியில வாய்ப்பளிக்கும் வகையில், இணைக்கப்பட்ட கல்லூரிகள் எல்லாம் ஒரு சர்வகலாசாலையுடனோ, அல்லது பல சர்வகலாசாலைகளுடனோ தோன்ற வேண்டும் என்று எடுத்துக்கூறினார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவ் விழாவில் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர். திரு. எஸ். கந்தசாமி, அட்வகேட் எஸ். ஆர். கனகநாயகம் ஆகியோரும் உரைநிகழ்த்தினர் இராமநாதன் கல்லூரி மாணவிகளின் 'அழகர் குறவஞ்சி' என்னும் நாட்டியஇசை நிகழ்ச்சி அரங்கேற்றம் செய்யப்பட்டது.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கக் குழந்தைகள் தினத்தில் நம் குழந்தைகளை அடுத்த முறையாவது அழைத்தால் மண்டபத்தில் இடம் காணாது.

ஃ ஃ ஃ

அதே மண்டபத்தில் இலங்கை-இந்தியர் சங்கத்தார் நடத்திய நேரு ஜயந்திக்கூட்டத்தில் சுவாமி ராமகநாதானந்தாஜி பேசினார்கள். நேருவைப் பற்றி சில புதுக் கதைகளை அக்கூட்டத்தில் கேள்விப்பட்டேன். பல வருடங்களுக்கு முன் நேதாஜி கொழும்புக்கு வந்து முஸ்லீம் லீக் கூட்டத்தில் பேசினாராம். என்ன மொழியில் பேசுவதென்று அவர் கேட்டதும், பக்கத்திலிருந்த தலைவர் 'உருது' என்றாராம் சுமார் அரைமணி நேரத்துக்கு மேல் நேதாஜி உருது மொழியில் பொழிந்து தள்ளினார். முடிவில் ஏதாவது கேள்வி கேட்கலாமென்றார். கூட்டத்தில் யாரும் ஒன்றும் பேசவில்லை. கூட்டத்தில் நான்கு பேருக்குத் தான் உருதுமொழி தெரியுமாம்! எல்லோரும் தமிழ் முஸ்லீம்கள். ஆங்கிலம் பொதுவாகத் தெரியுமென்று நேதாஜியிடம் கூறியதும், அவர் சற்றே கோபித்துவிட்டு, மீண்டும் அரைமணி நேரம் ஆங்கிலத்தில் பேசினாராம்! இச்சம்பவத்தை டாக்டர் லீக் தெரிவித்தார்.

வேறு சில ருசியான நேருகதைகளைத் தலைமைவகித்த டாக்டர் ரத்னாயக்கா கூறினார். சில பௌத்த பிரதிநிதிகளுடன் டாக்டர் ரத்னாயக்கா சாஞ்சியில் நடந்த விழாவுக்குச் சென்றிருக்கையில், ஓர் இலங்கைப் பௌத்த பிக்குவுக்கு ஜுரம் கண்டு ஆஸ்பத்திரியிலே இருந்தார். இதை நேருஜியிடம் தெரிவித்ததும், புதுடில்லிக்கு அவசரமாக டெலிபோன்செய்து, விமானத்தில் ஒரு நிபுணரைச் சில மணிக்குள் வரவழைத்து சிகிச்சை அளித்தாராம். மறுநாள் விழாவில் இலங்கைப் பிக்கு கலந்துகொள்ள முடிந்ததென்று நன்றியுடன் தெரிவித்தார், செனேட்டர் ரத்னாயக்கா.

அங்கு ஒரு பெரிய ஊர்வலம் பக்தியுடன் செல்லுகையில், மகாபோதி சங்கத் தலைவர் முகர்ஜி ஊர்வலத்தை நிறுத்தியதாயும், உடன் நேருஜி "ஏன் நிறுத்த வேண்டும்" என்று ஆத்திரத்துடன் கூறி, ஊர்வலத்தை மேலே செல்லச் செய்தாராம். இப்படி இன்னும் எவ்வளவு கதைகளோ!

ஃ ஃ ஃ

கொழும்பிலே நடந்த அக்கூட்டத்துக்கு எதிர்க்கட்சியைச் சேர்ந்த செனட்டர் ஏ. பி. ஜயசூரியா, உடன் ...

## இந்துசமூகம் தீர்மானிக்க...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

எல்லா இந்துக்களும் ஆலயம் சென்று வழிபடுவது பற்றி சில விஷயங்களை மனதிலிருத்துவது அவசியம். அமைதியான முறையிலே மனமாற்றம் செய்யும் முறையையே சமய விஷயங்களில் கைக்கொள்ள வேண்டும் அரசாங்கச் சட்டம் விரும்பத்தக்கதல்ல. இவ் விஷயத்திலே இந்துக்கள் அல்லாதவர் தலையிடுவதும் விரும்பத்தக்கதன்று. இந்து சமூகமே தனக்குத் தேவையான மாறுதல்களை தன் முயற்சியால் செய்ய வேண்டும். அரசாங்கமோ அல்லது மற்றச் சமயத்தவரோ இதில் தலையிடுவதாயின் அதிக தீங்கும், வேற்றுமைகளும் ஏற்படுவதாக இருக்கும்.

அரசியல் கட்சிகளும், கட்சி என்ற முறையில் எல்லா இந்துக்களுக்கும் ஆலயப் பிரவேச உரிமையைப் பெற்றுத் தரும் பொறுப்பையும் சுமையையும் ஏற்கத் தேவையில்லை ஏனெனில் அரசியல் கட்சிகளில் பலபல சமயத்தவரும் கலந்திருப்பர். இந்துக்கள் அல்லாதாரும் இருப்பதால், அரசியல் கட்சிகள் இந்துசமய விஷயத்தில் கட்சிமுறையில் தலையிடாதிருப்பது உசிதமாகும். ஆலயப் பிரவேச, ஆலய வழிபாட்டு விஷயத்தில் இந்துக்களே தங்களுக்குள்ளாக இப்பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள விட்டுவிடுவது தான் உசிதமும் விரும்பத்தக்கதுமாகும். ஆலயப் பிரவேச விஷயத்தில் அரசியல் கட்சிகள் நேர்முகமாகக் கலந்து கொள்ளாமல் இருப்பது நல்லது. அரசியல் கட்சிகளில் இருக்கும் இந்துமெம்பர்கள், மற்ற இந்துக்களுடன் சேர்ந்து இதில் ஈடுபடுவது அவர்களது கடமையும் உரிமையுமாகும்.

இந்த ஆலயப் பிரவேச இயக்கத்தில் ஈடுபட்டிருந்த மகாத்மகாந்தி, இவ்விஷயத்திலே இந்துக்கள் மட்டுமே ஈடுபட வேண்டுமென்று திட்டவட்டமாகக் கூறியிருந்தார். அவர் அறிவுறுத்திய மற்றொரு மேலான விஷயத்தையும் கவனிக்க வேண்டும். ஆலய வழிபாடு செய்பவர்களுக்கு மட்டுமே இந்துக்களின் ஆலயப் பிரவேச வழிபாட்டு இயக்கத்தில் ஈடுபட வேண்டுமென்றார். சமய உரிமையும் கடமையும்பற்றிய இவ்விஷயத்தில் புனிதமான - பக்திச் சூழ்நிலை இருக்க வேண்டுமென்றே இந்த நிபந்தனையையும் அவர் வகுத்தார்.

இந்து சமூகத்திலே பிறந்தவர் யாவருக்கும் இந்துக் கோவில்களுக்குச் செல்லவும் அங்கு சென்று வழிபடவும் அதனால் ஆத்மீக லாபமடையவும் பூரண உரிமையும் கடமையுமுண்டு. பிறப்பு காரணமாக எந்த இந்துவையும் ஒதுக்கிவைப்பது பெரும் பாவமும் குற்றமுமாகும்.

இந்து சமூகத்தினர் இன்று செய்யவேண்டியது என்ன? இனி சற்றும் தவக்கம் செய்யாமல் தங்களுக்குள்ளாக கலந்து யோசித்து, இந்துக்கள் அனைவரும் ஆலய வழிபாடு செய்வதற்கான வசதியையும் சந்தர்ப்பத்தையும் அளிக்க, சமரச சமாதான முறைகளைப்பற்றி தீர்மானிக்க வேண்டும். இந்துக்களின் முக்கியமான குடும்பவிஷயம் இது. இப் பிரச்சினையைத் தாங்களே தீர்மானிக்காமல், அரசாங்கமும் இந்துக்களல்லாதாரும் இதில் தலையிட்டு, தீர்க்கும்படி செய்வது, இந்துக்களின் சமய, சமூக, மனிதாபிமான, பொதுநல புகழுக்குக் களங்கம் அளிப்பதாகும். இதில் பாராமுகமாகவோ, அசமந்தமாகவோ இந்துக்கள் இருக்கப் படாது அப்படிஇருப்பது உலக சரித்திரத்திலே இந்து சமயத்துக்கும், சமூகத்துக்கும் பெரும் இழுக்காகும். ஆகவே இந்து ஆலய வழிபாட்டு விஷயத்தைப் பற்றி இலங்கையிலுள்ள இந்துப் பொதுமக்கள் கூடி, ஆலோசனைசெய்து தக்க சீர்திருத்தங்களைச் செய்வது அவர்களது மேலான கடமையாகிறது.——

மதுவிலக்கு என்று ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். இந்திய ஹைகமிஷனர் சச்சார் மேடையிலிருந்தும், ஒன்றும் பேசவில்லை. என்றாலும் மறுநாள் 'டெயிலி நியூஸ்' பத்திரிகையில் பார்த்தேன். இவ்விருவரும் பேசியதாகப் போட்டிருந்தது! பாவம் நிருபர், துண்டு விளம்பரத்தைப் பார்த்து விட்டுச் செய்தி எழுதிவிட்டார்போலும்!

ஃ ஃ ஃ

ஆணும் பெண்ணுமாய்
அடியார்க் கருள் நல்கிச்
சேணின்றவர்க் கின்னருள்
சிந்தை செய்வான்
பேணிவழிபாடு பிரியா
தெழுந் தொண்டர்
காணுங்கடல் நாகைக்
காரோணத்தானே.

—திருஞானசம்பந்த சுவாமிகள்.

கொலைவழக்கு

## மோட்டாரகார் பிணையில் விடுபட்டது

மாவிட்டபுரம், சனி

உரும்பிராய் கரந்தன் கொலைசம்பந்தமாக பொலிசாரால் சந்தேகத்தின்பேரில் கைப்பற்றப்பட்டு பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த ஐந்தாவது சந்தேக நபரின் மோட்டார்கார் மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நிற்சிங்காவினால் ஆயிரம் ரூபாய் பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளது.

உரும்பிராய் கரந்தனைச் சேர்ந்த காசியர்செல்லப்பா என்பவர் துப்பாக்கியினால் சுட்டுக் கொலைசெய்யப்பட்டது சம்பந்தமான வழக்கு மல்லாகம் நீதிபதி முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்த பண்டாரி முருகன், பண்டாரிநாமுத்தன், பண்டாரி இளையவி, வைத்திலிங்க ராசபதி, வயிரமுத்து இராசதுரை ஆகியோர் நீதிபதி முன் ஆஜரானார்கள். கன்கேசன்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பேர்ஜி விஜயசூரியா நீதிபதியிடம் தமக்குத் தவணைதரும்படி கேட்டார். இதனைத்தொடர்ந்து ஐந்தாவது சந்தேக நபரின் வழக்கறிஞர் பொலிஸார் கைப்பற்றி வைத்திருக்கும் காரை பிணையில் விடுவிக்கும்படி விண்ணப்பித்தார். அதனை ஏற்ற நீதிபதி காரை ஆயிரம் ரூபா பிணையில் கொண்டுசெல்ல அனுமதியளித்து மேல்விசாரணையை இம்மாதம் 29-ந் திகதிக்கு ஒத்திவைத்தார். முதல் இரண்டு சந்தேகநபர்களின் சார்பில் வழக்கறிஞர் திரு. எஸ். நடராசாவும், 3-ம், 4-ம் சந்தேகநபர்களின் சார்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினமும், ஐந்தாம் சந்தேக நபரின் சார்பில் வழக்கறிஞர் திரு. எஸ். ஸ்ரீதரனும் ஆஜரானார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் பிரதிநிதிமீது வழக்கு

### மாவட்ட நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், ஞாயிறு

கடந்த வருடம் மார்ச் மாதம் 22ம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற பொதுத் தேர்தலில் கிளிநொச்சி தேர்தற் தொகுதியில் போட்டியிட்ட திரு. என். எஸ். சேதுகாவலரின் தேர்தல் செலவுகளை குறிப்பிட்டகால எல்லைக்குள் தேர்தல் உத்தியோகத்தருக்குச் சமர்பிக்க தவறியதாக அவரின் தேர்தல் பிரதிநிதியான பி. திருஞானத்திற்குஎதிராக யாழ்ப்பாணம் மாவட்ட உதவித்தேர்தல் உத்தியோகத்தரால் தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் நீதிபதி பீ. டிருபேட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாண உதவிதேர்தல் உத்தியோகத்தர் திருபீ முருகேசுவின் அனுசரணையுடன் முடிக்குரிய புரக்ரர் எஸ். கே. திரவியநாயகம் ஆஜரானார்.

உதவித் தேர்தல் உத்தியோகத்தர் பீ. முருகேசு அவரது உதவியாளர் என். சண்முகசுந்தரம், என் எஸ். சேதுகாவலர் ஆகியோரின் சாட்சியங்களின்பின் நீதிபதிவழக்கை மேல் விசாரணைக்காக சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தி. பிரதிவாதியானபீ திருஞானத்தை 500ரூபா பிணையில் செல்லுமாறும், மாவட்டநீதிமன்றத்தில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டார்.

## கரைச்சி கி. ச. தலைவர் பிரதமருக்கு தந்தி

யாழ்ப்பாணம், ஞாயிறு

தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஐ நா. விலிருந்து திரும்பி வரும் வரை கரைச்சிக் கிராமசபை அந்தஸ்தை உயர்த்துவதற்கான நடவடிக்கை எதையும் மேற்கொள்ளவேண்டாமென ஸ்தலஸ்தாபன மந்திரிக்கு உத்தரவிடும்படி கோரி பிரதமர் டட்லி சேனநாயாக்காவுக்கு கரைச்சிக் கிராமசபைத் தலைவர் திரு. வி. ஆனந்தசங்கரி தந்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இலங்கைத் தூதுக் கோஷ்டியின் தலைமைப் பிரதிநிதியாக ஐ. நா. வில் கலந்துகொண்டுள்ள திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துக்கும் தந்தி ஒன்றை திரு. ஆனந்தசங்கரி அனுப்பி வைத்துள்ளார். கரைச்சிக் கிராமசபை அந்தஸ்தை உயர்த்துவதற்கான நடவடிக்கையை ஸ்தலஸ்தாபன மந்திரி மேற்கொள்கிறார் என்றும், உடன் தலையிட்டு நிறுத்தும்படியும் இத்தந்தியில் கோரப்பட்டுள்ளது.

வவுனியா எம். பி., உடுப்பிட்டி எம். பி. ஆகியோருக்கும இதேபோன்ற தந்திகள் அனுப்பப்பட்டுள்ளன.

## சிரமதானம்

பண்டத்தரிப்பு, சனி

இளவாலை உபதபாற் கந்தோரின் சுற்றுப்புறத்தை அதன் ஊழியர்களான திருவாளர்கள் நமசிவாயம், கந்தசாமி, அந்தோனிப்பிள்ளை. வேலாயுதம் ஆகியோர் சிரமதான முறையில் துப்புரவு செய்தனர். இதில் தபால் கந்தோர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

---

பண்டத்தரிப்பு, சனி

சென். ஆன்ஸ் சன சமூக நிலையம் என்ற பெயருடன் இளவாலை பிரதான வீதியில் புதிய சன சமூக நிலையம் ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது.

## சிறைச்சாலையில் திருட்டு

நாவலப்பிட்டி, சனி

கண்டி போகம்பர சிறைச்சாலையில் ஏற்பட்டிருக்கும் 13,000 ரூபாய் பண மோசடி சம்பந்தமாக சிறைச்சாலை மேற்பார்வை அதிகாரி ஒருவர் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். இதில் சிறைச்சாலையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவரும் சம்பந்தப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது.

சிறைச்சாலை செலவுகளுக்கும், சிறைக்கைதிகளுக்குமான படி என இப்பணம் தெரிய வருகிறது.

கண்டிப் பொலிஸ் அதிகாரிகள் இந்த மோசடி சம்பந்மான விசாரணையை நடத்துவதற்கும் ஒரு கமிட்டியை நியமித்துள்ளது.

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், சனி

சங்கானை மேற்கு வடலியடைப்பு சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நிலையத் தலைவர் திரு. அ. வீரசிங்கம் தலைமையில் நிலையமண்டபத்தில் நடைபெற்றது.

நிர்வாகிகள் வருமாறு: தலைவர்; அ. வீரசிங்கம், உப தலைவர்: அ. க. துரையப்பா, காரியதரிசி; செல்வன். செ. மகேந்திரன், உபகாரியதரிசி- சி. மு. ஜெயபாலசிங்கம், தனாதிகாரி: ம. ஸ்ரீஸ்கந்தராசா, நிலைப் பொறுப்பாளர்; பே. பரமசாமி. பத்திராதிபர்: த. புவனேந்திரன். நிர்வாகிகள் சு. சிவதாசன், ந. கதிர்காமராசா, கணக்குப்பரிசோதகர்: பொ. சபாபதிப் பிள்ளை.

## அபராதம்

மாவிட்டபுரம், சனி

சங்கானை கிழக்கு பிரம்பத்தையைச்சேர்ந்த நவரத்தினம் அமிர்தலிங்கம் என்பவர் சென்ற ஆகஸ்ட் மாதம் நாலாம் திகதி அதே இடத்தைச்சேர்ந்த சின்னம்மா நவரத்தினம் என்னும் பெண்மணிக்குப்பொல்லால் அடித்துப்படுகாயம் ஏற்படுத்தியதாக சங்கானைப் பொலிசாரால் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு டி. எஸ். தித்சிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின்பின் எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட நீதிபதி எதிரிக்கு ஐம்பது ரூபாய் அபராதமும் கோர்டு கலையும்வரை சிறையும்விதித்து தீர்ப்பளித்தார், சங்கானைப் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் திரு. மென்டிஸ் வழக்கை நடத்தினார்.

## இளம்பிள்ளை வாத தடுப்பு மருந்து

பருத்தித்துறை, சனி

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்டவர்களுக்கு இளம்பிள்ளைவாத நோய்த் தடுப்பு மருந்தை நகரசபை சௌக்கிய சேவைப் பகுதியினர் வழங்கிவருகின்றனர.

## மத்திய மருந்துச்சாலை

யாழ்ப்பாணம், சனி

தொல்புரத்தில் மத்திய மருந்துச்சாலை ஒன்றை வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம் இம்மாதம் 28ந் தேதி திறந்து வைப்பார்.

## விவசாயிகள் கஷ்டம்

கொடிகாமம், சனி

தென்மராட்சிப் பகுதியில் அடிக்கடிபெய்யும் கடும் மழை காரணமாக விவசாயிகள் பெரிதும் கஷ்டமடைகிறார்கள். இப்பகுதியிலுள்ள வயல்கள் வெள்ளக்காடாகக்காட்சி அளிக்கின்றன.

## 'இரத்த தானம் ஒரு புனிதபணி"

உடுப்பிட்டி, சனி

''யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் நிலவும் இரத்த தட்டுப்பாட்டை நீக்க ஓரளவு உதவி செய்துள்ளீர்கள். மனத்திற்காக இரத்த தானம் செய்வது மாற வேண்டும். இரத்ததானம் புனிதபணியாகும்.'' என்று யாழ். இரத்த வங்கி டாக்டர் திரு. ஜோசப் கட்டைவேலி ஞானசாரியார் கல்லூரியில் மேற்படி மாணவர்களாலும், கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி, நெல்லியடி ஐக்கிய கனாசாலைமாணவர்களாலும் வழங்கப்பட்ட இரத்ததானத்துக்கு நன்றி தெரிவிக்கையில் கூறினார். சுமார் 25 மாணவர்கள் இரத்ததானம் செய்தனர்.


# கிரீக்கோ சூப்பர் கோப்பி

## கொழும்பு ஜோன் கிரீன் அன்ட் கம்பனியாரின்

உற்பத்தி

கவர்ச்சியூட்டும் பைக்கற்றுகள்! அதி நறுமணம் கொண்டது!

மறக்கவே முடியாத ருசியுடையது! நிதான விலை!

கொழும்பில் உள்ள கிரீக்கோ கைத்தொழில் நிலையத்தில் விசேஷ தயாரிப்பு முறைகளைக் கையாண்டு வறுத்து அரைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்:

M. M. T. P.

142, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.





# சுமித்தியன்

## காய்கறிப் பீடைகளை ஒழிக்கும் சர்வ கிருமி நாசினி

கிருமிகளை நாசம் செய்வதும் அதே சமயம் மனித பாவனைக்குப் பாதுகாப்பானதும் என்று முற்றிலும் நிரூபிக்கப்பட்ட கிருமி நாசினி இதோ வந்திருக்கிறது. கோஸ் கீரைவகைகள, பூசினி, புடோல் போன்ற காய் ரகங்கள், மிளகாய் மற்றும் காய்கறிகளையும், வெங்காயம், புகையிலை, உருளைக்கிழங்கு, நிலக் கடலை, சிட்ரஸ், முதலாம் எலுமிச்சை ரகங்கள், மா, அன்னாசி போன்ற பழ விருட்சங்கள், அலங்காரச் செடி கொடிகள் ஆகியவற்றையும், அரித்தும் சாரம் உறிஞ்சியும் பாதிக்கும் சகல பீடைகளையும் ஒழித்துக் கட்ட சுமித்தியன் சிபாரிசு செய்யப்படுகிறது.

சுமித்தியன் உபயோகியுங்கள்- அது பாதுகாப்பானது, செயலவன்மை வாய்ந்தது.

ஷெல் ரசாயனப் பொருட்கள் SHELL

ரசாயனப் பொருள் என்றதும் நினைவில் வருவது ஷெல.

'அல்றெக்ஸ்,' 'டீல்றெக்ஸ் 20,' 'டீல் றெக்ஸ் எக்ஸ்ட்ரா,' 'என்றெக்ஸ் 20,' 'ஆர்கோமீன்,' 'பொஸ்றின்,' 'பிட்றின்,' 'மலதியன்,' ஷெல் களைப்புற்கொல்லி எம் 50, ஷெல் களைப்புற்கொல்லி ஆர் 25, 'கிறமவின்,' ஷெல் பி. எச். சி. 10% தூள். இவை ஷெல் ஸ்தாபனத்தாரின் விரிவான விவசாய ரசாயனப் பொருள்களில் சில மாத்திரமே.

GRANTS 2602

'ஏ' பிரிவு 2-ம் டிவிஷன்

# நாளை நடைபெறும் சாம்பியன் போட்டி

## நடேஸ்வராவும் கனகரத்தினமும் 'மோதி'க் கொள்ளும்

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ்ப்பாணம் பாடசாலை விளையாட்டுச்சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுவந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 'ஏ' பிரிவின் 2-ம் டிவிஷனுக்கான சாம்பியன் போட்டி நாளை திங்கட்கிழமை நடைபெறும்.

இப் பிரிவில், பிரிவுச் சாம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டு ஏற்கனவே போட்டியில் கலந்து கொண்டு ஒத்திவைக்கப்பட்ட கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலயக் கோஷ்டியும் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியும் மோதிக்கொள்ளும் ரசிகர்கள் அதிக நாட்களாக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இப் போட்டி யாழ். விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கிறது.

கனகரெத்தினம் கோஷ்டி விபரம்: காப்டன் செல்வன் ரசி, ரி. சின்னராசா, (கோலி) அல்லின், குணரட்ணம், அலெக்ஸ், மரியகுமார், மரியநாயகம், இம்மனுவல், மகேந்திரன், சுதேசானந்தன், செல்வராசா.

நடேஸ்வரா கோஷ்டி வீரரின் விபரம்: காப்டன் எஸ். அருமைநாயகம், ஸ்ரீரங்கநாதன், தேவராசா, சண்முகநாதன், (கோலி) ஆனந்த கிருஷ்ணன், அன்ரன், சிவகுருநாதன், லக்சுமிகாந்தன், சிவம், ஆனந்தராசா, கந்தசாமி, விக்னேஸ்வரன்

திருக்கோணமலை

# சென். ஜோஸப்கல்லூரி சாம்பியனானது

திருக்கோணமலை, சனி

கிழக்கு மாகாண பாடசாலைகளின் 19 வயது 'ஏ' பிரிவின் உதைபந்தாட்டச் சாம்பியனாக திருகோணமலை சென். ஜோசப் கல்லூரி தெரிவுசெய்யப்பட்டது. இச் சாம்பியன் போட்டியில் திருமலை சென். ஜோசப்கல்லூரியும் மட்டக்களப்பு சென் மைக்கலும் மோதிக்கொண்டன.

பலத்த கரகோஷத்திற்கிடையே ஆரம்பமான விளையாட்டு, உற்சாகமும், சுறுசுறுப்பாகவும் நடைபெற்றது. இரு கோஷ்டியினரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காத முறையில் விளையாடினார்கள். முடிவில் பலத்த எதிர்ப்பிற்கிடையே சென். ஜோசப் கல்லூரிவீரர்களின் 'பாஸிங்' மூலம் சென். ஜோசப் இரண்டு கோல்களை புகுத்தி வெற்றியீட்டியது. சென் மைக்கல் கல்லூரி ஒரு கோலாவது போடவில்லை.

திருமலை சுற்றுமதில் விளையாட்டரங்கில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு. கிருஷ்ணசாமி மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## திருமகள் இல்லம் வெற்றி பெற்றது

சுழிபுரம். சனி

வடலியடைப்பு கலைவாணி சனசமூக நிலையத்தினர் நடத்திய விளையாட்டுப் போட்டியில் திருமகள் இல்லத்தினர் (174) இரண்டு புள்ளிகளை மேலதிகமாகப் பெற்று முதலாவது இடத்தைப் பெற்றனர். நா கள் இல்லம் (172) இரண்டாவது இடத்தைப் பெற்றது. போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு திருமதி பேரின்பநாயகம் அத்தனுசிரியார் பரிசில்கள் வழங்கினர்.

## விமானப்படை வெற்றி

திருகோணமலை, சனி

திருக்கோணமலை ஒலிம்பிக்ஸ் கோஷ்டிக்கும், கொழும்பு விமானப்படையினருக்குமிடையே திருகோணமலை சின்ன முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற ஓர் உதைபந்தாட்டப்போட்டியில் கொழும்புக்கோஷ்டி வெற்றியீட்டியது.

கொழும்பு விமானப்படை மூன்று கோல்களையும், திருக்கோணமலை ஒலிம்பிக்ஸ் இரண்டு கோல்களையும் போட்டன.

திரு. பாலா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## "புகழை மட்டும் விரும்பாதீர்கள்"

உடுப்பிட்டி, சனி

"விளையாட்டுப் போட்டிகள் புகழுக்காக மட்டும் நடத்தப்படக்கூடாது. உடலுக்கு உறுதியையும், பிள்ளைகளின் சுபீட்ச வாழ்வையும் கருத்திற்கொண்டே இம்மாதிரி போட்டிகள் நடைபெற வேண்டும்" என்று அல்வாய் வடக்கு இளங்கோ சனசமூகநிலைய 18-வது வருடாந்த விளையாட்டு விழாவிற்கும், கதம்பவிழாவுக்கும் தலைமை வகித்த பருத்தித்துறை பொலிஸ் அதிகாரி திரு. டி. கே. ஜெயராஜன் பேசுகையில் கூறினர். விழா குச்சம் வயிரவராலய மைதானத்தில் நடைபெற்றது.

குச்சம் வயிரவராலய பரிபாலனசபைத் தலைவர் திரு. கி. மார்க்கண்டு நிலையக் கொடியை ஏற்றிவைத்து போட்டிகளை ஆரம்பித்தார். வடமராட்சிப்பகுதி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி எம். அருளம்பலம் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில்களை வழங்கினர்.

# ஸ்கந்தாவிடம் கேகாலை கோஷ்டியினர் தோல்வி

## இராஜலிங்கம் 4 கோல்கள் போட்டார்

சுன்னாகம், சனி

யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்துள்ள கேகாலை சென். மேரிஸ் கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டியினர் இங்கு முதல் தடவையாக விளையாடிய போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாவிடம் 5-0 கோல்களால் தோல்வியடைந்தனர்.

இடைவேளைக்கு முன்னர் இரு கோஷ்டிகளும் விட்டுக்கொடுக்காது விளையாடின. இடைவேளைக்குச் சில நிமிடங்களுக்குமுன்னர் ஸ்கந்தா கோஷ்டியைச் சேர்ந்த மகேந்திரன் ஒரு கோல் அடித்திருந்தார்.

இடைவேளையின் பின்னர் இரு கோஷ்டிகளும் திறமை

(8-ம் பக்கம் பார்க்க)

## டேபிள்டெனிஸ் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு


யாழ். மாவட்ட டேபிள் டெனிஸ் விளையாட்டுச் சுற்றுப்போட்டி யாழ்ப்பாணம் வை எம். ஸி. ஏ. விளையாட்டுமண்டபத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சென். ஜோன்ஸ் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சென். அலுஸ் விளையாட்டுக்கழகம், யாழ்ப்பாணம் வை. எம். ஸி. ஏ விளையாட்டுக்கழகம், காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் டேபிள் டெனிஸ் கோஷ்டிகள் பங்குபற்றுகின்றன.

இச் சுற்றுப்போட்டியின் சாம்பியன்போட்டி யாழ்ப்பாணக்கல்லூரிக்கும், சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் மிடையே நடைபெறும்என எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரை 35 போட்டிகள் நடைபெற்றுவிட்டன.


மற்றவர்களை முந்திச் செல்ல

BSA

பி. எஸ். ஏ. கோல்டின் டிலக்ஸ் ரேட்ஸ்டர் சைக்கிள்களையே தெரிவு செய்யுங்கள்



- உலகிலேயே மிகச் சிறந்த சைக்கிள்
- நீடித்த உறுதி வாய்ந்தது
- வசதிக்குச் சாதகமான அமைப்பு
- 'டெரி-டைப்' சீட்டுகள்

துரிதமான பாதுகாப்பான ஓட்டத்துக்கு ஒரு பி. எஸ். ஏ. யில் செல்லுங்கள்

ஏகவிநியோகஸ்தர்கள்:

கார்கில்ஸ் (இலங்கை) லிமிடெட்


# ஈழநாடு சைக்கிள் ஓட்டப்போட்டி

## விபரங்கள்

ஜனவரி 1, 1967 — பி. ப. 4·00 மணி

### முதலாவது ஓட்டப்பந்தயம்

### மாணவர் போட்டி

ஐந்துமைல் — யாழ். கோட்டையைச் சுற்றி

| | |
|---|---|
| முதலாவது பரிசு: | பி. எஸ். ஏ. சைக்கிள் |
| இரண்டாவது பரிசு: | கிரிக்கெட் மட்டை |

ஜனவரி 1, 1967 — பி. ப. 4·30 மணி

### இரண்டாவது ஓட்டப்பந்தயம்

### வயது வந்தோர் போட்டி

பத்துமைல் — யாழ். கோட்டையைச் சுற்றி

| | |
|---|---|
| முதலாவது பரிசு: | பி. எஸ். ஏ. சைக்கிள் |
| இரண்டாவது பரிசு: | தூய வெண்கலத்தட்டு (ட்ரே) |

### விதிகளும் நிபந்தனைகளும்

### முதலாவது ஓட்டப்பந்தயம்

1. பங்குபற்றுவோர் யாவரும் ஜனவரி 1, 1967-ல் 18 வயதோ அல்லது அதற்குக் குறைந்தவர்களாகவோ இருக்க வேண்டும்.
2. பந்தயத்தில் பங்குபற்றப் போதிய உடலுறுதியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.
3. 'ஈழநாட்'டில் வெளியாகும் கூப்பன் பத்திரங்களிலேயே எல்லா விண்ணப்பங்களும் அனுப்பப்பட வேண்டும்.
4. பங்குபற்றுவோர் பி. எஸ் ஏ. சைக்கிள்களிலேயே ஓட வேண்டும்.
5. விண்ணப்ப முடிவு திகதி: டிசெம்பர் 15, 1966.
6. முடிவு திகதிக்குப் பின் அனுப்பப்படும் விண்ணப்பமெதுவும் ஏற்றுக் கொள்ளப்படாது.
7. ஓட்டப்பந்தய முடிவுக்குப்பின் எவ்விதக் கடிதத் தொடர்பையும் 'ஈழநாடு' ஏற்காது.
8. மத்தியஸ்தர்களின் தீர்ப்பே முடிவானதாகும்.

### இரண்டாவது ஓட்டப்பந்தயம்

இதில் கலந்து கொள்வோர் யாவரும் ஜனவரி 1, 1967-ல் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

மற்றும்படி, முதலாவது ஓட்டப்பந்தயத்துக்கான விதிகளும், நிபந்தனைகளும் இரண்டாவது ஓட்டப்பந்தயத்துக்கும் பொருந்தும்.

9. ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் 5 கூப்பன்கள் இணைக்கப்பட வேண்டும்.

## கூப்பன்

பெயர்: ..............................

விலாசம்: ..............................

இலக்கம்: ..............................

[பி. எஸ். ஏ. சைக்கிளின் பிறேம் (frame)]

(கோட்டில் வெட்டி எடுக்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டத்தை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிவேறுபாடின்றி கலந்து கொள்ள வேண்டும் தனியாக ஒருகட்சிமட்டும் முன்வந்தால் தேர்தல் காலத்தில் ஒரு பிரச்சினையாகிவிடும். ஆதலால் எல்லாக் கட்சிகளும் இக்குழுவில்இடம் பெறவேண்டும்.

சிறுபான்மைத் தமிழர் மட்டும் சத்தியாக்கிரகம் செய்வதில் பயன் ஏற்படாது. பெரும்பான்மைத் தமிழரும் கூடியளவு பங்கு பற்றினுல்தான் சத்தியாக்கிரகம் பயனளிக்கும்.

இந்த குழு எடுக்கும் முடிவை எல்லாத் தமிழ் எம். பி.க்களும் கைபெழுத்திட்டு பிரதமரிடம் சமர்ப்பித்து, உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி கேட்கவேண்டும்.

### சட்டம் அவசியம்

செனட்டர் சு. நடராசா கூறியதாவது:

தீண்டாமை ஒழிப்பிற்கு சட்டம் அவசியம். சட்டத்தை மீற மக்கள் தயாராக இல்லை. சட்டத்தை அமுலாக்கினுல் நிச்சயம் மனம் மாறித்தான் ஆகவேண்டும். சட்டத்தை அமுலாக்க பெரும்பான்மைதமிழர்கள் முன்வர வேண்டும். சாதி வேற்றுமை இப்பொழுது நகரத்தில் இல்லை. கிராமத்தில் மட்டும் தான் இருக்கிறது. நாட்டுப் புறத்திலுள்ள சூழ்நிலை வேறு.

தேநீர்க்கடைப் பிரவேசத்திற்கு சட்டம் உதவி யாகஇருக்கும்பாகுபாடுகாட்டும் தேநீர்க்கடைகளுக்கு லைசென்ஸ் கொடுக்கக் கூடாது இதற்கான விதியை இயற்றவேண்டும் சட்டத்தை அமுலாக்கினுல் 90 வீதம் தீண்டாமை ஒழிந்துவிடும்

பாகுபாடு காட்டும் தேநீர்க்கடைச் சொந்தக்காரர்மீது வழக்குத் தொடர சாட்சிகள் வேண்டும். தற்பொழுது சாட்சியமளிக்க முன்வரும் தொண்டர்களைச் சேர்த்து வருகிறோம். தேநீர் கடைப்பிரவேசம் சுலபமானது. ஆனுல் ஆலயப்பிரவேசத்தைநன்கு சிந்தித்துத் தான் செயலில் கொண்டு வரவேண்டும்.

புறக்டர் ரீ. சங்கரப்பிள்ளை பேசும்போது தீண்டாமை ஒழிப்பிற்கு சட்டம் அவசியமென்றும் சட்டம் அமுலுக்குவருமுன் மக்கள் மனம் மாற்றப்படவேண்டுமென்றும் தொகுதிவாரியாக பிரசாரக்கூட்டங்கள் நடத்தவேண்டுமென்றும் கூறினுர்.

திரு. எம் கே. அந்தனி சில் பேசும்போது, இந்தியாவில் சைவ ஆசாரம் மீறப்படும்போது இங்குமட்டும் மீறக் கூடாதுஎன்றும் தீண்டாமை ஒழிப்பில் ஆலயப்பிரவேசம் முக்கியமானது என்றும் கூறினுர்.

திரு.கே. நேசையா பேசும் போது, சிறுபான்மைத் தமிழருக்கு தனிப்பாடசாலை தனிவாசிகசாலைகள் இருக்கக்கூடாதென்றும், கூட்டுறவு இயக்கங்களில் அவர்களும் பங்குபற்றவேண்டுமென்றும் கூறினுர்.

திரு. ஜே. ச. சுந்தரம் பேசும்போது, சட்டமூலம் சமூகக்குறைபாடுகளை நீக்கலாமென்பதில் தனக்கு நம்பிக்கையில்லை யென்றும், ஏற்கனவே உள்ள சமூக ஏற்றத்தாழ்வு கூட்டத்தினுல் ஒரு பயனுமில்லையென்றும் கூறினுர். சமாதானமுறை

## துலா விழுந்ததால் மரணம்

மாவிட்டபுரம், சனி

கந்தசஷ்டி விரதத்திற்கு தோயச்சென்ற ஒருவர் மீது துலா அச்சுலக்கை முறிந்து துலா விழுந்து பின்னர் அவர் மரணமான சம்பவம் அளவெட்டியில் நிகழ்ந்துள்ளது.

அளவெட்டி தெற்கைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை குமாரசாமிஎன்பவர் நேற்று மாலை கந்தசஷ்டி விரதத்திற்காக முழுகச் சென்ருர் என்றும் அவர் முழுகிக்கொண்டிருக்கையில் திடிரேன துலா அச்சுலக்கை முறிந்துவிட்டது என்றும் இதன் விளைவாக துலா அவரதுதலையில் விழுந்தது என்றும் கூறப்பட்டது.

இவர் உடனடியாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். இன்று ஆஸ்பத்திரியில் அவர் காலமானுர் இச்சம்பவம் சம்பந்தமாக சுன்னுகம்பொலிஸ் சார்ஜண்ட் கிருஷ்ணராசா விசாரணைசெய்கிருர்.

## தீண்டாமை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழரசுக்கட்சி: திருவாளர்கள்: எஸ். கதிரவேலுப்பிள்ளை, வி. தர்மலிங்கம், வி. என். நவரத்தினம், சு. நடராசா. தமிழ்க்காங்கிரஸ்: திருவாளர்கள்: எம். சிவசிதம்பரம், ரீ. சங்கரப்பிள்ளை, சமசமாஜக் கட்சி: திருவாளர்கள்: பொ நாகலிங்கம், ஆர். ஆர். தர்மரத்தினம், புரட்சிவாத சமசமாஜக்கட்சி: திரு. வி. எம். பொன்னையா, சைவப் பிரமுகர்கள்: திரு. எம். வைரமுத்து, திரு. எஸ். தனபாலசிங்கம், அகில இலங்கை உரிமை குறைந்த அபிவிருத்தி இயக்கத் தலைவர் திரு. ஜே. ச. சுந்தரம், திருவாளர்கள்: வி. இ. டேவிட், அ. சிறில், என். ஆசீர்வாதம், ஜே. இ. ஆசீர்வாதம் (அட்வகேட்).

அகிலஇலங்கை உரிமை குறைந்ததமிழர்அபிவிருத்தி இயக்கம் இந்த சர்வகட்சி மகாநாட்டை ஒழுங்குசெய்திருந்தது. மத்தியகுழுவின் அடுத்த கூட்டத்தை டிசம்பர் மாதம் 3-ம் திகதி பிற்பகல் யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

யில் சமூகக்குறைபாடுகள் ஒழிக்கப்படவேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

மக்கள் முன்னேற்றமன்றத்தைச் சேர்ந்த திரு. வி. விஜயரத்தினம் பேசும்போது, சாதிப்பிரச்சினை அரசியலுக்கு அப்பாற் பட்டதென்றும், மானசிகபுரட்சிமூலமே ஒழிக்கப்படவேண்டுமென்றும் கூறினுர்.

தீவுப்பகுதியைச் சேர்ந்த திரு. கே. சண்முகராசா, தீண்டாமையும் சாதியும் ஒன்ருேடொன்று பின்னிப் பிணைந்ததென்றும், சாதிப் பாகுபாட்டை ஒழிக்கத்தீண்டாமை ஒழியவேண்டுமென்றும் கூறினுர். சிறுபான்மைத் தமிழரின் சங்கங்களில் பெரும்பான்மைத் தமிழர் 75 வீதம் அங்கம்வகித்தால் பலன் கிடைக்குமென்று அவர் மேலும் கூறினுர்.

புரட்சிவாத சமசமாஜ கட்சிப்பிரமுகர் திரு. வி. ஏ. பொன்னையா, சத்தியாக்கிரகம் 3 மாதகாலத்திற்குப் பின் போடப்பட்டது வரவேற்கத்தக்கதென்றும், எல்லோரும் ஒத்துழைத்தால் ஒருமாதகாலத்தில் தேநீர்க்கடை பிரவேசம் நடத்தலாமென்றும் கூறினுர்.

மற்றும்பலர் கூட்டத்தில் தங்கள் கருத்தைத் தெரிவித்தனர்.

## அதிகக்கப்பல்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பித்துவைத்தபோது மேற்கண்டவாறு கூறினுர்.

யாழ்ப்பாணம் பரமேஸ்வரா கல்லூரியில் இக்கருத்தரங்கு ஆரம்பமானது. அரசாங்க அதிபர் கூட்டுறவுக் கொடியை ஏற்றிவைத்தார். பல சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

அரசாங்க அதிபர் மேலும் கூறியதாவது:

சமாஜத்தின் முக்கிய பிரச்சினை தொழிலாளருக்கு வேலைகொடுக்கும் பிரச்சினையாகும். தற்பொழுதுள்ள இறக்குமதிவேலைகள் பழமைவாய்ந்த வையாகக்காணப்படுகிறது. யாழ்ப்பாண துறைமுகத்திலிருந்து5மைல் சென்று தொழிலாளர் பொருட்களை இறக்குமதிசெய்கின்றனர். காங்கேசன்துறையில் அரையளவு தண்ணீரில் சென்று பொருட்களை இறக்குமதி செய்கின்றனர். இதனுல் தொழிலாளருக்கு பெரும் கஷ்டம் ஏற்படுகிறது. இப்படியான நிலையிலும், தொழிலாளர் திறமையாக வேலைசெய்துள்ளனர். ஒரு தினத்திற்கு 500 தொன் இறக்குமதி செய்துள்ளார்கள். சில நாட்களில் 1000 தொன்னும் இறக்குமதி செய்துள்ளார்கள். இதை யிட்டு கொழும்புத்துறைமுகத் தொழிலாளர், மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்கள்.

காங்கேசன்துறை துறைமுகக் கட்டட வேலைகள் ஆரம்பித்ததும், தொழிலாளர் குறைகள்நீங்கும். இந்த மாவட்டத்திற்கு கூடுதலான கப்பல்களை வரவழைக்க திட்டமிட்டுள்ளோம்.

இலங்கை சுதந்திரமடைந்த நாடாக இருந்தும் மற்றும் சுதந்திரமடைந்த நாடுகளுடன் ஒப்பிடும்பொழுது வாழ்க்கைத்தரம் குறைந்திருப்பதைக்காணலாம் இந்த உண்மையை மக்கள் உணர்ந்தால் கூடுதலான முயற்சியில் ஈடுபடலாம்.

கருத்தரங்கம் இன்றுகாலை 9 30 மணிக்குத்தொடர்ந்து நடைபெறும். இன்றுகாலை திருவாளர்கள் இ. இரசரத்தினம், கே. சிவப்பிரகாசம் ஆகியோர் உரைநிகழ்த்துவார்கள். பிற்பகல் 2மணிக்கு பொதுக்கூட்டம் நடைபெறும்.

## ஸ்கந்தாவிடம்...

7-ம்பக்கத் தொடர்ச்சி

யாக விளையாடின. ஸ்கந்தா வீரர்கள் மிகத் துரிதமாகப் 'பாஸிங்'செய்து பல கோல்களைப் பெற்றுக்கொண்டனர். முன்னணி வீரர்களான இராஜலிங்கம் நான்கு கோல்களை விளாசித் தள்ளினுர். முடிவில் ஸ்கந்தா 5-0 கோல்களைப் பெற்று வெற்றியீட்டியது.

டாக்டர் ஜே. சி. துரைசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

## திருக்கேதீஸ்வரத்தில் திருவாசக விழா

திருக்கேதீஸ்வரம், சனி

மார்கழி மாதத் திருவெம்பாவைத் திங்கள் பத்து நாட்களிலும் திருக்கேதீஸ்வரம் திருவாசக மடத்தில் ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் ஆதரவில் திருவாசக விழா நடைபெறவிருக்கின்றது. கூட்டுப்பிரார்த்தனை, திருவாசகம் ஓதுதல், தியானம், புராணபடனம், பக்திப் பாடல்கள், வேதபாராயணம், திருவாசகச் சிறப்புப் பற்றிய சொற்பொழிவுகள், கதாப்பிரசங்கம் முதலியன இவ்விழாவில் முக்கிய இடம் பெறவிருக்கின்றன. திருவாசகச் சிறப்புவிழா டிசம்பர் மாதம் 25, 26, 27-ந் திகதிகளில் நடைபெறும். சிறப்புவிழாவில் இந்திய [illegible] கலந்து கொள்ளார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். அரசாங்க இலாகாக்களில்

## தமிழ் ஊழியர்கள் விபரம் கோரப்பட்டுள்ளது

### இடமாற்றத்துக்கு அறிகுறிகள்?

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண அரசாங்க இலாகாக்களில் தற்பொழுது வேலை செய்யும் தமிழ் உத்தியோகத்தர்களின் புள்ளி விபரங்களையும் அவர்களின் சேவைக்காலத்தையும் திறைசேரியும் உள்நாட்டு மந்திரி காரியாலயமும் கோரியுள்ளதாகத் தெரியவருகிறது.

தற்பொழுது யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்கத் திணைக்களங்களில் இரண்டாவது முறையாக சேவை செய்யும் உத்தியோகஸ்தர்கள் பெயர் பட்டியல் விபரங்கள் இவ்வாண்டில் இடம் பெற இருக்கும் இடமாற்றத்திற்காகவே கேட்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

திறைசேரி சுற்று நிருபப்படி அரசாங்க உத்தியோகஸ்தர்கள் பிரதான நகரங்களில் நான்கு ஆண்டுகளுக்குமேல் சேவை செய்ய முடியாது.

வெளி இடங்களில் பல ஆண்டுகளாக கடமையாற்றும் உத்தியோகஸ்தர்களும் மற்றும் அரசாங்க குமாஸ்தா சேவை சங்கமும், அரசாங்க எழுதுவினைஞர் சங்கமும் அரசாங்கம் உத்தியோகஸ்தர்களை மாற்றம் செய்யும்பொழுது உத்தியோகத்தர்கள் தங்கள் தங்கள் சொந்த இடங்களில் ஒரு முறையாவது கடமையாற்ற சந்தர்ப்பம் வழங்கவேண்டுமென்று அரசாங்கத்தை அடிக்கடி வற்புறுத்தி வந்தது குறிப்பிடத்தக்கது.

## ஓவசியர், கங்காணி மீது பொலிஸார் வழக்கு

மாவிட்டபுரம், சனி

கீரிமலை சேந்தாங் குளத்தில் லொறி ஒன்று குடைசாய்ந்து ஒருவர் மரணமானது சம்பந்தமாக காங்கேசன்துறைப் பொலிஸார் பொது மராமத்து ஓவசியருக்கும், கங்காணிக்கும் எதிராக வழக்குத்தொடர்ந்துள்ளனர்.

போக்குவரத்துக்கு இடைஞ்சலாக வீதியின் இரண்டு பக்கங்களிலும் கல்லுக்குவித்ததன் மூலம் கடந்த ஜூலை மாதம் 9-ம் திகதி காரைநகரைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை சோமசுந்தரம் என்பவர் செலுத்திச் சென்ற லொறி குடைசாய்ந்து அவர் அதற்குள் நசுங்கிமரணமானதாக இவ்வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இளவாலையைச் சேர்ந்தவரும் ஓவசியருமான திருச் செல்வராசா இமானுவல் தம்பிராசா, கங்காணி வைரவன் என்று அழைக்கப்படும் வைரவன் செல்லன் ஆகியோர் மீது காங்கேசன் துறைப் பொலிஸாரால் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நித்சிங்கா முன்னிலையில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டபோது முக்கிய சாட்சியான யாழ்ப்பாணம் பிரதம பொதுமராமத்து பகுதி என்ஜினியர் கோர்ட்டுக்குச் சமூகமளிக்கவில்லை. இதனுல் நீதிபதி அவருக்கு சம்மன்ஸ் அனுப்ப உத்தரவிட்டு வழக்கை அடுத்த வருடம் ஜனவரி மாதம் 16-ம் திகதிக்கு ஒத்திவைத்தார். பொலிஸ் தரப்பில் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு எஸ். வி. மூர்த்தி ஆஜரானுர். எதிரிகள்தரப்பில் திரு. டி. தம்பிரத்தினத்தின் அநுசரணையுடன் திரு. அரசவாலிடன் ஆஜரானுர்.

## வர்த்தக சங்க நிர்வாகிகள்

கொழும்பு, சனி

இலங்கை தொழில் நுட்பக்கல்லூரி வர்த்தக சங்கத்தின் புது வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

போஷகர்: திரு. டி. எஸ். சமரசிங்கா, உபபோஷகர்: திரு. என். ராஜரத்தினம், தலைவர்: திரு. எம். எஸ். ஹில்மே, உபதலைவர்: செல்வி ரோகினி பெர்ணுண்டோ, பொதுக்காரியதரிசி திரு. கே. ஸ்ரீகணேஷ் ரெவ், பொருளாளர்: திரு. எம். சி. எம். பெர்ணுண்டோ.

## பண்டிதமணிக்குப் பாராட்டு

உடுவில், வெள்ளி

ஒவ்வொரு எழுத்தாளர்களும் தமக்கென்று ஒருதனி நடையைக்கையாளுகின்றனர். ஆனுல் பண்டிதமணி அவர்களோ தாம் எடுத்துக் கொண்ட பொருளுக்கேற்ற நடையைக் கையாண்டு வருகிருர், இது தான் ஏனைய எழுத்தாளருக்கும் பண்டிதமணிக்கும் உள்ள பெரும் வேறுபாடுஆகும்". என்று இரசிகமணி கனக செந்திநாதன் திருநெல்வேலி செங்குந்தா இந்துக்கல்லூரியில்நடைபெற்ற இலக்கியவழி" விமர்சன அரங்கில்பேசும் போது கூறினுர். இக்கல்லூரியின் உயர்கல்வி மன்றத்தினரால் இவ்விழா ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது, செல்வன் வை கனகரத்தினம் தலைமை வகித்தார்.

## உடுப்பிட்டி கிராமசபை தரம் உயர்த்தப்படும்?

உடுப்பிட்டி, சனி

உடுப்பிட்டிக் கிராமசபையைப் பட்டின சபையாகத் தரமுயர்த்துவதற்காக உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. எஸ். சி மாணிக்கவாசகரும், கிராமச்சபை துணைத்தலைவர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினமும் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளதாகத் தெரியவருகிறது. நேற்றுநடைபெற்ற கிராமசபையின் மாதாந்தக் கூட்டத்தில் அங்கத்தவர்கள் இதுசம்பந்தமாக பிரச்சினையைக்கிளப்பிய போது விவாதத்தை அடுத்த கூட்டத்தில் பரிசிலனை செய்வதெனமுடிவு செய்ததாகவும் தெரியவருகிறது.

## பிரதம நீதியரசர்

கொழும்பு, சனி

புதிய பிரதம நீதியரசரான திரு. எச். எம். ஜி. பெர்ணுண்டோ நாளை நீதிமன்றத்தில் அட்டோர்ணி ஜெனரலினுல் வரவேற்கப்படுவார். பிரதம நீதியரசர் திரு. சன்சோனி இளைப்பாறியதையொட்டி அந்தப் பதவிக்கு நீதியரசர் திரு. எச்.எம். ஜி. பெர்ணுண்டோ நியமிக்கப்பட்டுள்ளார். அவர் நேற்று விஸ்வாசப் பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலக்கம் 62-ல் கோவில் வீதி, 62-ல் இலத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு நவம்பர் மீ 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org